Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | தை-20 | 02-02-2005 | புதன்கிழமை | ஓசை -350



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-T1251)

# அனர்த்த நிவாரணம் என்ற பெயரில் புலிகளுக்கு சில அரசுகள், நிறுவனங்கள் இராணுவ உதவி

## விசாரிக்க சந்திரிகாவிடம் ஜே.வி.பி. கோரிக்கை

(கொழும்பு)

**சுனாமி அனர்த்த நிவாரணப்பணி என்ற பெயரில் சில வெளிநாடுகளும் அரசசார்பற்ற அமைப்புக்களும் சிறிலங்காவினுள் ஊடுருவி விடுதலைப் புலிகளுக்கு இராணுவ உதவி புரிந்து வருவதால் நிவாரணப் பணியில் ஈடுபட்டுவரும் வெளிநாட்டவர்கள் மற்றும் அவர்களது பணிகுறித்து உடன் விசாரணை செய்யவேண்டும் என்று ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவிடம் நேற்று அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.**

மூன்று பக்கங்கள் அடங்கிய கடிதமொன்றிலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. நாட்டின் மீள் கட்டுமானப் பணிகளில் தோழமைக்கட்சி என்ற வகையில் தமது ஆலோசனையைப் பெறாமல் தம்முடன் செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தத்துக்கு மாறாக சனாதிபதி செயற்படுகிறார் என்று கடந்த சில வாரங்களாக அரசுக்குள் போர்க்கொடி தூக்கியுள்ள ஜே.வி.பி. அரசைவிட்டு வெளியேற முடிவெடுத்துள்ளதாகத் தகவல்கள் கசிந்துள்ள நிலையில் தற்போது ஜே.வி.பி. சனாதிபதிக்கு அனுப்பியுள்ள இக்கடிதம் குறித்து அரசியல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

-அம்பாறை மாவட்டத்தில்-

## அரசியல்துறைப் போராளி மீது அதிரடிப்படையினர் கடும் தாக்கு!

அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் போராளி இலக்கியன் நேற்று சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார்.

இவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் திருக்கோவிலில் இருந்து அறுகம்பை நோக்கிப் பயணித்தவேளை அப்பகுதியில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பிரிட்டிஸ் தொழிற்கட்சி உறுப்பினர்கள் இலங்கைக்கு வருகை

பிரிட்டிஸ் தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் நோபட் ஈவன்ஸ் தமிழீழத்திற்கு விஜயம் செய்யவுள்ளார். ஐரோப்பிய பாராளுமன்றத்தில் பிரிட்டன் பிரதிநிதியான தொழிற்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான றொபேட் ஈவன்ஸ் தமிழீழத்தில் ஏற்பட்டுள்ள ஆழிப்பேரலை அனர்த்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயில் ரணில் - ஹெல்கேசன் சந்திப்பு! சுனாமி நிவாரணம் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனை நோர்வேயில் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

நோர்வேக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்ற எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று நோர் வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல் கேசனைச சந்தித்தார்.

இச்சந்திப்பின்போது சுனாமியால் பாதிப்புக்குள்ளான வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்கு நிவாரணங்களை வழங்கும் போது ஒன்றிணைந்து செயற்படக்கூடிய அமைப்பு ஒன்றை உருவாக்குவது தொடர்பாக அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுவரும் பேச்சு வார்த்தைகள் தொடர்பாகவும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பின் முக்கிய வீதிகளில் காவலரண்கள் அமைத்து சோதனை

கொழும்பு களனியிலும், காலி வீதியிலும் நேற்றுமுன்தினமும் நேற்றும் படையினர் தீவிரசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

களனிப்பகுதியில் நேற்று முன்தினம் தற்காலிக காவலரண்களை அமைத்து விசேட அதிரடிப்படையினரும், பொலிசாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் இவர்கள் வீதியால் சென்ற தனியார் வாகனங்கள்,முச்சக்கரவண்டிகள்,உந்துருளிகள்

(12ஆம் பக்கம் பார்க்ச)

## சமாதான முயற்சிகள் தொடர்பில் ஜப்பான் நெருங்கிய அவதானிப்பை மேற்கொள்கிறது

### ஜப்பானிய துணை வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

ஜப்பானிய அரசாங்கம் சமாதான் முயற்சிகள் தொடர்பாக நெருங்கிய அவதா னிப்பை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கு வந்துள்ள ஜப்பானின் துணை வெளியுறவு அமைச்சர் சூசென் தனிகாவா இந்தத் தகவலை நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் வெளியிட்டார். சமாதான முயற்சிகளில் தற்சமயம் ஜப்பானின் சார்பில் அக்கியோசூடா ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறார். எதிர் காலத்திலும் இந்த ஒத்துழைப்பை ஜப்பானிய அரசாங்கம் வழங்குமென அவர் உறுதியளித்தார்.சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கையைக் கட்டியெழுப்ப ஜப்பானிய அரசாங்கம் 80 மில்லியன் டொலர்களை நேரடியாக வழங்கியுள்ளதாகத் தெரிவித்த அவர்,அரசாங்கத்தின் புனரமைப்புப் பணிகள் திருப்தியளிப்பதாகக் குறிப்பிட்டார்.

கடந்த 29 ஆம் திகதி இலங்கைக்கு வந்த அவர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மாத்தறை போன்ற பிரதேசங்களுக்கு விஜயம் செய்தார். பின்னர் பிரதமமந்திரி மற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமனாறில் கோர வீதிவிபத்து சிறுவன் உட்பட இருவர் மரணம்

### மேலும் இருவர் படுகாயம்

தொண்டமனாறு கெருடாவில் பகுதியில் நேற்றுக் காலை உந்துருளி ஒன்றும் ஹைஏஸ் ரக ஊர்தியொன்றும் விபத்தில் சிக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர். மற்றுமிருவர் படுகாயமடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களுள் ஒருவர் பாடசாலை மாணவனாவார்.

காலை 10.30 மணியளவில் எதிரெதிராக வந்துகொண்டிருந்த இவ்விரு ஊர்திகளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. விபத்து நடந்த இடத்திலேயே பாடசாலை மாணவனான புலோலிப் பகுதியைச் சேர்ந்த இ. தனுஷியன் (வயது-08) உயிரிழந்துள்ளார்.

படுகாயமடைந்த ஏனைய மூவரும் உடனடியாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையினில் முதலில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட வேளையில் அவர்களுள் ஒருவரான வறணியைச் சேர்ந்த கந்தையா நந்தகுமார் (வயது 21) சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். அவரது சடலம் யாழ் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான உளவளத்துணை ஒருங்கிணைப்புக் குழு கூடியது

(அலுவலக செய்தியாளர்)

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உளவளத்துணை ஒருங்கிணைப்புக் குழு ஒன்று கூடல் நிகழ்வு நேற்று மாலை 2.30 மணியளவில் விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்றது.

உளவளத்துணைச் சேவைக்குழுத் தலைவர் கருணாரெட்ணம் அடிகளார் தலைமையில் நடைபெற்ற மேற்படி ஒன்று கூடல் நிகழ்வு அகவணக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு சென்ற கூட்ட அறிக்கை வாசித்தல் உளவளத்துணைச் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வு ஒருங்கிணைப்புக் குழுவினர் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள உளவளப் பயிற்சிகள், மற்றும எதிர்காலத்தில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட் டது.

இது பற்றி தலைவர் கருணாரெட்ணம் அடிகளார் கருத்துத் தெரிவிக்கையில், வழமையான ஒன்று கூடல் தான் இது இன்றைய கூட்டத்தில் ஒவ்வொரு இடைத்தங்கல் முகாமிலுள்ள மக்களிற்குக் கருத்துக்களை வழங்க உளவளத் துணையாளர்களை பகிர்ந்தளித்துப் பூரணப்படுத்தக்கூடிய நிலையை உருவாக்கி உரியவற்றை அனுப்புவதாக முடிவுகள் எடுத்துள்ளோம். அதேபோல் நாங்கள் சமூகத்தொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### பொய்கை

சகலவிதமான கணினி வேலைகளும் விரைவாக செய்து கொடுக்கப்படும். அத்துடன் அன்பளிப்புப் பொருட்கள், அழகு சாதனப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள நாடுங்கள். பொய்கை, கனகபுரம், தெரு,கிளிநொச்சி. (5627)

### தவறிவிட்டது

இராஜேந்திரம், கௌசல்யா 154 ஆம் கட்டைக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் நேற்று தேசிய அடையாள அட்டையும், நிரந்தர பயண அனுமதி அட்டையும், அடங்கிய பெண்கஷ், கைபேஸ் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன் தகவல் கீத்தன். (5628)


# காத்தான்குடியில் முறைப்பாடு செய்யச்சென்ற அகதிமுகாம் தலைவர் மீது பொலிசார் தாக்கு

புதிய காத்தான்குடி அப்றார் அகதி முகாம் தலைவர் கே.எல். அகமட் சிறாஜ் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்வதற்காக காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு சென்றபோது அவரது முறைப்பாட்டைப் பதிவு செய்ய மறுத்த பொலிசார் நான்கு மணி நேரம் அவரை தடுத்து வைத்ததாகவும், அவரைத் தாக்கியதாகவும் இதுபற்றி பூரண விசாரணை நடாத்த வேண்டுமெனவும் அகதி முகாம் நிர்வாகிகளும் அங்கு தங்கியுள்ள குடும்பத் தலைவர் களும் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட் சகரிடம் வேண்டுகோள் விடுத்துள் ளதாக நலன்புரி நிலையப் பொறுப்பாளர் எம். ஐ.எம். றஹ்மதுல்லாஹ் தெரிவித்தார். மார்க்க விரோதப் பொருட்கள் விற் பனை சம்பந்தமான முறைப் பாட்டினாலேயே இப்பிரச்சினை ஏற்பட்டதாகவும், பொலிஸ் அத்தியட்சகருக்குத் தெரிவித்த நிர் வாகத்தினர் இது விடயத்தில் விசாரணை வேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பொலிஸ் அத்தியட்சகர் விசாரணை மேற்கொள்ளப்படுமென உறுதி அளித்துள்ளதாக அகதி நிலைய பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

# வட்டக்கச்சிப் பிரதேசத்தில் கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை

வட்டக்கச்சிப் பிரதேச காவல்பணிமனையினரால் வட்டக்கச்சி காவல்பணிமனை நிர்வாக எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் குற்றத் தடுப்பு நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

குற்றத்தடுப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாக கசிப்பு ஒழிப்பு நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை சம்புக்குளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இப்பகுதிப் பொதுமக்களின் கசிப்பு ஒழிப்பு விழிப்புணர்வால் காவல்துறையால் முன்னெடுக்கப்பட்ட இந் நடவடிக்கையில் 45 லீற்றர் கசிப்பு, 1 பரல் கோடா மற்றும் கசிப்பு உற்பத்திப் பொருட்களும், உற்பத்தி உபகரணங்களும் கைப் பற்றப்பட்டன. இது தொடர்பாக வட்டக்கச்சி காவல்பணிமனைப் பொறுப்பதிகாரி கி. கிங்ஸ்லிதாஸ் தகவல் தருகையில்,உயிர்க்கொல்லி விளைபொருளான கசிப்பினை முற்று முழுதாக அழித்தொழிக்கும் தமது பணிக்கு இப்பகுதிப் பொதுமக்கள் பூரண ஆதரவினை அளித்து வருவதாகவும், கசிப்பு ஒழிப்பினை மேற்கொள்ள வேண்டிய அவசியம் பற்றி மக்களிற்கு ஏற்பட்டுள்ள விழிப்புணர்வே இதற்குக் காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (15)

# ஜே.வி.பி. உறுப்பினரின் அநாகரிகமான நடவடிக்கைக்கு பத்மநாதன் கண்டனம்

திருக்கோவில் பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் வசந்த பியதிஸ்ஸ அத்துமீறி நுழைந்தமை கண்டிக்கத்தக்க விடயம்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் தெரிவித்துள்ளார். அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் வகையில் தான் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கின்ற நிலையில் தமது பிரதேசத்துக்குள் இவ்வாறு அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட சம்பவம் குறித்தும் அவர்கவலை தெரிவித்தார். அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த நிவாரணப்பணி என்ற போர்வையில் நுழைந்த இவ் வாறான சக்திகள் கிழக்கை துண்டாட வேண்டும் என்ற பிரசாரங் களையும் மக்களிடையே செய்து வருவதாக அவர் கவலை தெரிவித்தார்.

# ரிச்சட் டி சொய்ஸா கொலை வழக்கு மார்ச் 15 வரை ஒத்திவைப்பு

ஊடகவியலாளர் ரிச்சட்டி சொய்ஸாவின் கொலை வழக்கு விசாரணைகள் நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றன

இதன்போது சாட்சியமளித்த பிரதிவாதியான ஹொன்டா தம்மிடம் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி வந்த சிலர் ரிச்சட் டி சொய்ஸாவின் வீட்டைக் காட்டுமாறு கேட்டதாகவும் அச்சுறுத்தலின் காரணமாக தாம் ரிச்சட் டி சொய்ஸாவின் வீட்டை அடையாளம் காட்டியதாகவும் தெரிவித்தார் இந்த நிலையில் வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் 15 ஆம் திகதி நடைபெறுமென நீதிமன்றம் அறிவித்தது (32)

# சுனாமி வேலைத்திட்டம் தொடர்பான பணியாளர்களுக்கான கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து உதவி புரியும் வகையில் சுனாமி வேலைத்திட்டம் தொடர்பாக பணியாளர்களுக்கான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமையன்று வடமராட்சி அத்தாயில் அமைந்துள்ள வடமராட்சி புனர்வாழ்வுக் கழகத்தில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ந்து பணிபுரியும் வகையில் பொறுப்புக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

சகல பணியாளர்களும் மேற்படி கலந்துரையாடலில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# ஒட்டு சுட்டான்-புதுக்குடியிருப்பு வீதி புனரமைப்பு ஆரம்பம்

நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் இருந்த புதுக்குடியிருப்பு ஒட்டுசுட்டான் வீதியைத் தற்போது புனரமைப்புச் செய்யும் நோக்குடன் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவ் வீதி புனரமைக்கப்படுவதன் மூலம் பெருமளவான மக்களின் போக்குவரத்துஇலகுவாக்கப்படுமென மக்கள் தெரிவிக்கின்றனர். (08)

# நெதர்லாந்து இராஜதந்திரிகள் கூட்டமைப்பினர் நாளை சந்திப்பு

நெதர்லாந்து இராஜதந்திரிகள் குழுவினருக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையிலான சந்திப்பு நாளை வியாழக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது. இச்சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சார்பில் இரா.சம்பந்தன் ஜோசப் பரராஜசிங்கம் பொன்னம்பலம் கஜேந்திரகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக கூட்டமைப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (32)

## ஒன்றுகூடவும்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டப் பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் நாளை மாலை 3.00 மணிக்கு புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள கணினிப்பயிற்சி நிலையத்தில் ஒன்றுகூடுமாறு வேண்டப்படுகின்றனர். (08)

-வடமராட்சி கிழக்கில்-

# சுனாமியால் பாதிக்கப்பட்டோரின் இழப்பு விபரங்கள் அதிகாரிகளால் பதிவு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கில் சுனாமி அலையினால் மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்பு, சொத்து விபரங்கள்.திழப்பு போன்றவற்றின் விபரங்கள் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணம் கசேரியிலிருந்து வருகை தந்த அலுவலர்களினால் மக்கள் இடம்பெயர்ந்து தங்கியுள்ள ஒவ்வொரு நலன்புரி நிலையங்களிலும் மக்களிடம் நேரடியாக கேட்டுபதியப் பட்டுள்ளது. அதன் படிஉயிரிழப்பு வீட்டுப் பெறுமதி,வீட்டுத்தளபாடங்களின் பெறுமதி, நகையின் பெறுமதி.வாகனங் களின் பெறுமதி தொழில் உபகரணங் களின்பெறுமதி என்று ஒவ்வொன்று ஒவ்வொன்றாகக் கேட்டு அவர்கள் பதிவு செய்துகொண்டனர். (11)

-ஊடகங்கள் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பாக-

# சிறிலங்கா ஊடகத்துறை அமைச்சுடன் ஜே.வி.பி. முக்கியஸ்தர்கள் சந்திப்பு

ஜே.வி.பி முக்கியஸ்தர்களுக்கும், ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவிற்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சில் இந்த சந்திப்பு இடம் பெற்றுள்ளது. அரசாங்க ஊடகங்கள் தம்மைப் புறக்கணிப்பதாக ஜே.வி.பி தரப்பால் தெரிவிக்கப்பட்டுவரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இச் சந்திப்பில் விரிவாக ஆரா யப்பட்டுள்ளது. இதனை அடுத்து மங்கள முனசிங்க தலைமையில் அரசாங்க ஊடகங்களின்முக்கிய தலைவர்களுக்கும், ஜே.வி.பியிற்கும் இடையிலான சந்திப்பு ஒன்றும் அமைச்சர் மங்கள சமரவீரவின் ஏற்பாட்டில் நடை பெற்றுள்ளது.அரச ஊடகங்களின் செய்தி அறிக்கை தொடர்பாகவும்,ஏனைய நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் ஜே.வி.பியின் செயலர் ரில்வின் சில்வா அனுப்பிய கடிதம் தொடர்பிலும், அதில் தெரிவிக்கப் பட்ட விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப் பட்டுள்ளது. ஜே.வி.பி சார்பில் அக்கட்சியின் செயலர் ரில்வின் சில்வா பிரசார செயலர் விமல் வீரவன்ச ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டதாகஅறிவிக்கப்பட்டுள்ளது. (32)

# ஜேர்மனிய மருத்துவக்குழு இன்று வடமராட்சி வருகின்றது.

ஜேர்மனியிலிருந்து நான்காவது மருத்துவக் குழு அணி இன்று வடமராட்சி பகுதிக்குவருகின்றது. ஐவர்அடங்கியஇக்குழுவில் வைத்திய நிபுணர் டாக்டர் மற்றும் உதவியாளர்கள் , அடங்குவர். இக்குழு பழையபுண்கள் குணப்படுத்துதல், சதைகள் மாற்றிப்பொருத்துதல் போன்ற வைத்தியசேவைகளைப் செய்யவுள்ளதாகப் பருத்தித்துறை வைத்தியசாலை வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. (45)

# சாவு அறிவித்தல்

## வேலுப்பிள்ளை பத்தினிப்பிள்ளை

அனலைதீவைப் பிறப்பிடமாகக் கொண்ட வேலுப் பிள்ளை பத்தினிப்பிள்ளைஅவர்கள் நேற்றுக் (01.02.2005) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நெடுந்தீவு உடையார் குமாரசாமி சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற அனலைதீவு - சின்னப்பா உபாத்தி யார் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வேலுப் பிள்ளையின் அன்பு மனைவியும், தங்கம்மா, ரத்தினம், காலஞ்சென்ற சின்னராசா, இராசையா (பாண்டியன் குளம்), சிவக்கொழுந்து, சிவசாமி (கனடா), யோகராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும். கந்தசாமி, கணபதிப்பிள்ளை(நெடுந்தீவு மேற்கு), விஜயலட்சுமி, கௌசலா(கனடா) சிவநந்தினி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவர் . அன்னாரின் இறுதிக் கிரியைகள் இல.131 பாண்டியன்குளம் இல்லத்தில் இன்று பிற்பகல் (02.02.2005) நடைபெறும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
வே.இராசையா (மகன்),
131, பாண்டியன்குளம்.

(சி.11233)

# மன்னர் ஞானேந்திராவால் நேபாள அரசு கலைப்பு

## தலைவர்கள் பலர் வீட்டுக்காவலில்

(காத்மண்டு)

நேபாளத்தில் பிரதமர் சேர்பகதூர் நேபா தலைமை



யிலான கூட்டணி அரசை மன்னர் ஞானேந்திரா திடீரெனக் கலைத்துள்ளார். அத்துடன் பல்வேறு தலைவர்களையும் வீட்டுக்காவலில் வைத்துள்ளார். மன்னர் ஞானேந்திரா கடந்த ஆண்டு சேர்பகதூர் நேபாவை நேபாளப் பிரதமராக நியமித்தார். இதனையடுத்து எதிர்வரும் ஏப்ரல்மாதம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவும் மாவோயிஸ்ட் தீவிரவாதி களுடன் பேச்சுவார்த்தை நடத் தவும் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து கடந்த ஒருவருடமாக நேபா தலைமையில் ஆட்சி நடத் தப்பட்டு வந்தது.

நேபாளத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் அடிக்கடித் தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களையும் சில தினங்களுக்கு முன் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

இந்நிலையில் நேபாள அரசை மன்னர் ஞானேந்திரா திடீரென்று கலைத்துள்ளார்.



மேற்குக்கரைப் பகுதியில் பலஸ்தீன படைப்பிரிவினர் பயிற்சியிலீடுபட்டுள்ளனர்

# கார்க் குண்டு வெடிப்பு தஜிகிஸ்தானில் ஒருவர் பலி

(துஷான்பே)

ரஷ்யாவில் இருந்து பிரிந்த தஜிகிஸ்தான் நாட்டில் தலைநகர் துஷான்பேயில் அரசுகட்டடங்கள் அருகே நேற்று கார்க் குண்டு வெடித்தது. இதில் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டு உயிரிழந்தார். பல வாகனங்கள் சேதமடைந்துள்ளன.

இந்தச் சம்பவம் நடந்தபோது வெடித்துச் சிதறிய காருக்கு அருகே நிறுத்தப்பட்டு இருந்த கார்கள் கருகி நாசமாயின.

ஆப்கான் அருகே உள்ள தஜிகிஸ்தான். ஏழை முஸ்லிம் நாடான இதன் மக்கள் தொகை 70 இலட்சம் ஆகும். இங்கு 1992 முதல் 1997 வரை உள்நாட்டு யுத்தம் நடந்தது. இதில் ஒரு இலட்சம் பேர் பலியானார்கள்.

வருகிற 27 ஆம் திகதி இங்கு பாராளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கும் நிலையில் இந்த குண்டுவெடிப்பு இடம் பெற்றுள்ளது.

# சூடானில் இடம்பெற்ற படுகொலைகளை சர்வதேச நீதிமன்றில் விசாரிக்க வேண்டும்

## சட்ட வல்லுநர்கள் அடங்கிய ஆணைக்குழு கோரிக்கை

(டார்பன்)

**சூடானில் இடம்பெற்ற இனப்படுகொலைச் சம்பவங்களைச் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென சர்வதேச சட்டவல்லுநர்கள் அடங்கிய ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.**

சூடான் அரசாங்கமும் அதனுடன் இணைந்து செயற்படும் கிளர்ச்சிக்குழுவும் டார்பனின் மேற்குப் பிராந்தியத்தில் பொதுமக்களைத் திட்டமிட்டு துன்பப்படுத்தியதாக குறை கூறப்படுகின்றது. இந்தப் பகுதிகளில் இடம்பெற்றதாகக் கூறப்படும் அட்டூழியங்கள் பற்றி விசாரிப்பதற்காகக் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவின் அதிகாரிகள் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்.

அரச அதிகாரிகள் உள்ளிட்ட தனிநபர்கள் இன சுத்திகரிப்பு என்ற நோக்கத்தோடு குற்றச் செயல்களைக் கட்டவிழ்த்து விட்டிருக்கக் கூடுமென்று சர்வதேச சட்ட வல்லுநர்கள் அடங்கிய ஆணைக் குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்த விவகாரத்தைச் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரிக்க வேண்டுமென்றும்அந்த அமைப்பு சிபார்சு செய்துள்ளது.



வடக்கு ஜேர்மனியிலுள்ள மிருகக்காட்சிச் சாலையில் பிறந்துள்ள இரண்டு துருவக்கரடிக்குட்டிகள்

# தேர்தலில் வாக்களித்தமைக்காக ஈராக் மக்களுக்கு மேற்கு நாடுகள் பாராட்டு

(வோஷிங்டன்)

ஈராக் மக்கள் பெருமளவில் தேர்தலில் கலந்து கொண்டு வாக்களித்ததற்காக உலகத் தலைவர்கள் பலர் பாராட்டியுள்ளனர்.

" தீவிரவாதிகளின் சனநாயக விரோதக் கொள்கைகளை ஈராக்கிய மக்கள் ஒதுக்கித்தள்ளி விட்டனர். கொலையாளிகளின் மிரட்டல்களுக்கு அவர்கள் அஞ்சாமல் வாக்களித்துள்ளனா என அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் இருந்து சுதந்திரத்தின் குரலை உலகம் கேட்க இருக்கிறது.


வன்முறைக்கு தேர்தல் முடிவு கட்டாது. சனநாயகத்துக்கு எதிராகத் தீவிரவாதிகள் தொடர்ந்து வன்முறையில் ஈடுபட்டு வருவார்கள். அவர்களை எ்திர்த்து ஈராக்கிய மக்கள் நடத்தும் போராட்டத் துக்கு அமெரிக்க இராணுவம் ஆதரவாக இருக்கும். அவர்களுக் குப் போதுமான பயிற்சியையும், உதவியையும் அமெரிக்க இராணு வம் வழங்கும் என புஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்துப் பிரதமர் டொனி பிளேயர் கூறுகையில், " ஈராக்கை மட்டுமல்லாமல் இங்கிலாந்தையும், ஒவ்வொரு நாட்டையும் அச்சுறுத்தி வந்த உலகத் தீவிரவாதத்துக்கு ஈராக் தேர்தல் மிகப்பெரிய அடி கொடுத்துள்ளது. சுதந்திரத்தின் வலிமையை ஈராக் மக்கள் உணர்ந்துள்ளனர்" என்றார்.

'அதிக அளவு வாக்குகள் பதிவானது உண்மையாக இருக்குமானால் அது அமெரிக்காவுக்கு மட்டும் அல்ல, உலக சமுதாயத்துக்கே வெற்றிதான்" என்று பிரான்ஸ் அமைச்சர் ஜீன் பிராங் கோயஸ் பாராட்டியிருக்கிறார். ஜேர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளும், ஐ.நா பொதுச் செயலாள் கொபி அனானும் ஈராக் மக்கள் துணிச்சலுடன் வாக்களித்தத்தைப் பாராட்டியுள்ளனர்.

ஈராக் நாட்டுப் பாராளுமன்றத் தேர்தல் கடந்த திங்கட்கிழமை நடந்தது. இந்தத் தேர்தலைப் புறக்கணிக்கும்படி தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்திருந்தனர். இந்த மிரட்டலுக்கு அஞ்சாமல், ஈராக் மக்கள் பெருமளவில் தேர்தலில் கலந்து கொண்டு வாக்களித்தனர். பெண்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்தனர். 72 சதவீதம் வாக்குகள் பதிவானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்கொலைப்படைத்தாக்குதல்கள் நடந்த போதிலும், இதற்கு 35 பேர் பலியான போதிலும் வாக்குப்பதிவு தடங்கல் இல்லாமல் நடந்து முடிந்தது. ஈராக் மக்கள் திரளாக வந்து வாக்களித்ததற்கு உலக நாடுகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.



ஈராக்கில் வாக்குச்சீட்டுக்கள் எண்ணப்படுகிறது.

# வியட்நாமில் பறவைக்காய்ச்சல் பத்து வயதுச் சிறுமி பலி

பறவைக்காய்ச்சல் எனப்படும் தொற்று நோய் தாக்கியவர்களில் 80 சதவீதம் பேர் உயிரிழக்கிறார்கள். இந்த நோய்க்கு வியட்நாம் சிறுமி ஒருத்தி நேற்று முன்தினம் பலியாகியுள்ளார்.

லாங்க்அன் மாநிலத்தைச் சேர்ந்த அந்தப் 10 வயதுச் சிறுமிக்கு அவளது அண்ணனிடம் இருந்து இந்த நோய் தொற்றிக் கொண்டது. கோழிகளில் இருந்து பரவும் இந்த நோய் தாக்கியவர்களுக்கு உடம்பு அனலாகக் கொதிக்கும். இருமல் அதிகமாக இருக்கும். 10 வயதுச் சிறுமியின் அண்ணன் வைத்திய சாலைக்கு தூக்கிச் செல்லும் போது வழியில் இறந்து போனார். அவர் இறந்த சில நாட்களில் இப்போது சிறுமியும் பலியானாள்

# தாய்வானில் பூமியதிர்ச்சி

(தாய்பே)

தாய்வானின் வடகிழக்குப் பிரதேசத்தில் மிதமான பூமியதிர்ச்சி ஏற்பட்டுள்ளது. இந்த இயற்கை அனர்த்தம் ரிக்டர் அளவில் 5.2 ஆக பதியப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர். உயிர்ச்சேதங்கள் பற்றியோ, பொருட் சேதங்கள் பற்றியோ உடனடியாக எதுவும் அறிவிக்கப்படவில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர்

# ஈராக்கில் இருந்து அமெ. இராணுவம் 18 மாதங்களில் வெளியேறும்

## — ஈராக் உள்துறை அமைச்சர்

ஈராக் நாட்டில் இருந்து அமெரிக்க இராணுவம் அடுத்த 18 மாதங்களுக்குள் வெளியேறும் என்று ஈராக் உள்துறை அமைச்சர் பலா-அல் நக்யிப் கூறினார்.ஒரு தொலைக்காட்சிச் சேவைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறியுள்ளார்

அவர் மேலும் கூறியிருப்பதாவது; "18 மாதங்களுக்குள் எங்களை நாங்களே பாதுகாத்துக் கொள்வோம் அதன் பிறகு எங்களுக்கு அமெரிக்க இராணுவத்தின் உதவி தேவைப்படாது"என்று கூறினார்



தெற்கு ஈராக்கில் சிறைச்சாலை ஒன்றின் முன்னால் ரோந்து சுற்றும் அமெரிக்கப்படையினர்.

# அம்பாறையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

# இடம்பெயர்ந்தோர் முகாம்களில் முன்பள்ளி அமைப்பு

(அலுவலக செய்தியாளர்)

**தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் இடம்பெயர்ந்தோருக்கு புனர்வாழ் வளிக கும் திட்டத்தின் ஓர் கட்டமாக முன்பள்ளிகளை அமைத்து சிறுவர் களுக்கான கல்வியைப் புகட்டல் என்பது தற்போது ஏற்படுத்தப்பட் டுள்ளது.**

தமிழர் புனர்வாழ்வுக்கழகத் தின் முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிறுவனம் அம்பாறை மாவட்டத் தின் சகல அகதிமுகாம்களிற்கும் சென்று அங்குள்ள நிலைமை களுக்கு ஏற்ற வகையில் முன் பள்ளிகளை அமைத்து வருகின் றது. இந்நடவடிக்கையை வடக்கு கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய செயலா ளர் க.கணேசலிங்கமும், அம் பாறை மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப பாளர் ச.உதயாழினியும் இணைந்து வடக்கு கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மேலும் 11 முன்பள்ளி இணைப்பாளர்களைத் திரட்டி 30.01.2005 இல் இருந்து நடை முறைப்படுத்தி வருகின்றனர். முதற் கட்டமாக திருக்கோயில் பிரதேசச் செயலகப் பிரிவிலுள்ள அகதி முகாம் களில் முன்பள்ளிகள் அமைககப் பெற்றமைகுறிப்பிடத்தக்கது.(சோ)



யாழ்.வர்த்தகர் சங்கத்தினரால் கிளி.மாவட்ட வைத்தியசாலை நோயா ளர் விடுதிக்கென 50 மெத்தைகள் நேற்று முன்தினம் அன்பளிப்பாக வழங்கப பெற்றது. மேற்படி மெத்தைகள் வைத்தியசாலை நோயாளர் விடுதி களுக்கு வழங்கப் பெற்றுள்ளதனைப் படத்தில் காணலாம்.(படம்-சோதி)

# உழவு இயந்திர உறுதிப்படுத்தல் பதிவினை வலய தே.எ.பேரவையூடாக மேற்கொள்க!

## -வட்டக்கச்சி பிரதேச பொறுப்பாளர் கோரிக்கை

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேச உழவு இயந்திர உரிமையாளர்கள் தமது உறுதிப்படுத்துதல் பதிவினை வலய தேசிய எழுச்சி பேரவையூடாக மேற்கொள்ளுமாறு வட்டக்கச்சி பிரதேச அரசியல் துறைப்பொறுப் பாளர் சோழநிலவன் கேட்டுள்ளார்.

வட்டக்கச்சி பிரதேசத்தின் மாவடி, மாயவனூர், சிவிக்சென்ரர், இராமநாதபுரம், கல்மடு பகுதிகளைச் சேர்ந்த உழவு இயந்திர உரிமை யாளர்கள் உடனடியாக தமது பதிவுகளை வலய தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர்களிடம் மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது. (15)

# காலபோக நெற்செய்கைக்கு 940 பேருக்கு கிராமிய அபிவிருத்தி வங்கி கடனுதவி

(அலுவலகச்செய்தியாளர்)

கிராமிய அபிவிருத்தி வங்கி யினால் 2004.2005 ஆம் ஆண்டு காலபோக நெற்செய்கைக்கென நெற்செய்கையாளர்களுக்கு மீள ளிப்புக் கடன் வழங்கியுள்ளது.

மேற்படி காலபோக நெற்செய் கைக்கென மீளளிப்புக்கடனாக 940 குடும்பங்களுக்கு ஒருகோடியே 41 இலட்சத்து 54 ஆயிரத்து முன் னூற்றி எழுபது ரூபாய் கிராமிய அபிவிருத்தி வங்கியால் வழங்கப் பெற்றுள்ளது.

விவசாய முயற்சியில் ஆர்வ மிருந்தும் நிதியற்றிருக்கும் விவ சாயிகளுக்கு கிராம அபிவிருத்திவங் கியின் மேற்படி நடவடிக்கையா னது பெரும் நன்மையினைஅளித் துள் ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவனத்திற்கு!

(மல்லாவி)

பாண்டியன்குளம் பிரதேசத்திற்கு உட்பட்ட வயல்நிலங்களில் கபி லநிற தத்தியின் தாக்கம் எரிபந்தம் போன்றவற்றின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் இவற்றை சரியான முறையில் இனம் கண்டு தத்தி தாக்கமாயின் 'அத்தரா' அற்மைலர்' ,'அப்பலோஸ்', P.P.M.C போன்ற பூச்சி நாசினிகளையும் எரிபந்தமாயின் 'கினோஸ்கான்', நொச்சின்', 'பெயித் தீன்','லோஸ்கப்க்சுமின்' போன்ற பங்கஸ் நாசினிகளைச் சரியான கலவை முறைப்படி பிரயோகிக்குமாறு பாண்டியன்குள விவசாய போதனா சிரியர் போ.இளங்கீரன் கேட்டுள்ளார். (24)

# சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற மாற்றீடான வலுவுள்ளோருக்கு உதவி

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாற்றீடான வலு வுள்ளோருக்கு (ஊனமுற்றவர் களுக்கு) கிளிநொச்சி மாவட்ட ஊன முற்றோர் சங்கத்தினால் உதவிகள வழங்கப்பெற்று வருகின்றது. வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த பாதிக்கப்பெற்ற சங்கஅங்கத்த வர்கள் 52 பேருக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் ஐம்பத்தி இரண்டா யிரம் ரூபாவும், 52 மண்ணெண்ணெய் அடுப்புக்களும் கிளிநொச்சி செயல கத்தில் வைத்து வழங்கப்பெற்றது.



நேற்று முன்தினம் பிற்பகல் 4.00 மணிக்கு சங்க அதிகாரிகளால் மேற் படி பணமும் மண்ணெண்ணெய் அடுப்புகளும் வழங்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## கிளை நிர்வாகம் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர்களில் கிளை நிர்வாக தெரிவுக் கூட்டம் பளைப் பிரதேசத்தில்பளைப் பிரதேசப் பொறுப்பாளர் வின்சன் தலைமையில் கடந்த 30ஆம் திகதி இடம்பெற்றது.

இதில் சங்கத்தின்தலைவராக செ.தயாளனும் செயலாளராக செல்வனும் தெரிவு செய்யப் புட்டார்கள்.

இந் நிகழ்வில் தொழிற் சங்கப் பொறுப்பாளர் போர் பிரியன் கலந்து கொண்டு கருத்துரை வழங கினார். மாவட்ட முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கச் செயலாளர் கண் ணனும் கலந்துகொண்டார். (சோ)

# பூநகரி சுற்றயல் கூறு வைத்தியசாலை சபை புதிய நிர்வாகம் தெரிவு

(பூநகரி

பூநகரி சுற்றயல் கூறு வைத் தியசாலை சபை புதிய நிர்வாகத் தெரிவு கடந்த 27ஆம் திகதி இடம் பெற்றது.

இந் நிர்வாகத்தின் காப்பாள ராக அரச அதிபர் தி.இராசநாய கம், பிரதேச செயலாளர் மா.சிறீஸ் கந்த குமார், பிரதி மாகாண சுகா தாரப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி ஆகியோர் இருப்பர்.

தலைவராக வைத்தியசாலை வைத்திய அதிகாரியான சு.சுதர் சனும் உபதலைவராக பூநகரி வர்த்த சங்கத் தலைவர் பொ.ரவிச் சந்திரனும் தெரிவு செய்யப்பட்ட னர். செயலாளராக வி.க இராசதுரை யும் உதவி செயலாளராக பொன். தில்லைநாதனும், பொருளாளராக தி.சிவநாதனும் தெரிவு செய்யப் பட்டனர்.

தொடர்ந்து நிர்வாக உறுப் பினர் தெரிவு இடம் பெற்றது. நிர் வாக உறுப்பினர்களாக தா.கிருஷ் ணசாமி, ச.குணரத்தினம், ப.ஆனந் தராசா, செ.மாசிலாமணி, தி.சிவ லிங்கம், வா.சு இராசலிங்கம் திரு மதி கஸ்தூரி அமலச் செல்வன் இரா.செல்வராசா, யோ. ஞானசு ரேந்திரன், திருமதி ஜெ.பிறேமானந் தன் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

இக் கூட்டத்தில் வைத்திய சாலையின் அபிவிருத்தி தொடர் பாக பொ.ரவிச்சந்திரன், தி.சிவ லிங்கம், தி.சிவநாதன், யோ.ஞானசு ரேந்திரன், பொன். தில்லைநாதன் ஆகியோர் உரையாற்றினர்.

அத்துடன் வைத்தியசாலையில் வேலை செய்வோர் தொடர்பான பிரச்சினை பற்றிப் பேசப்பட்ட போது கடந்த 6 மாத காலமாக பல தொண்டர்கள் எதுவித வேத னமோ உதவியோ இல்லாமல் வேலை செய்வதைக் காணக் கூடியதாக உள்ள தென சுட்டிக்காட்டப்பட்டது. (34)

# முல்லை மாவட்ட சி.க.கூ சமாசத்தில் பணியாளர்களுக்கு பயிற்சிக் கருத்தரங்கு

முல்லை மாவட்ட சிக்கனக் கட னுதவு கூட்டுறவு சங்க சமாசத்தில் சமாசத்தின் மாவட்டச் செயலாளர் இ.யோசப்ஸ்ராலின் தலைமையில் கடந்த 27ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முல்லை. மாவட்ட சி.க.கூ சமாச அலுவலகத்தில் சி.க.கூ சமாசப் பணியாளர்கள் முத்து ஐயன் கட்டு ப.நோ.கூ.ச. பணியாளா கள் ஒட்டுசுட்டான், ப.தெ.வ.அ.கூ சங்க பணியாளர்களுக்குப் பயிற் சிக் கருத்தரங்கு இடம்பெற்றது.

உதவித் தொழில் ஆணையாளர் முல்லை, வவுனியா, மன்னார் மாவட்டம் குணபாலன் முகாமை நடவடிக்கை பற்றியும், சிரேஸ்ட தொழில் உத்தியோகத்தர் நகுலேஸ வரன் ஊழியர் சேமலாப நிதி நம் பிக்கை நிதி பற்றியும் உதவி தொழில் உத்தியோகத்தர் திருமதி சதானந்தம் பணிக்கொடை லீவு கள் சம்பளம் பற்றியும் பயிற் சிகளை வழங்கினார். முத்துஐயன் கட்டு ப.நோ.கூ சங்கப் பணியாளர் விமலேஸ்வரனின் நன்றியுரையு டன் பிய 2.00 மணிக்கு பயிற்சி நிறை வுற்றது.

# றெட்பானா கிராமத்திற்கு நிரந்தர வைத்தியசாலை தேவை

(அலுவலக செய்தியாளர்)

றெட்பானா, விசுவமடு கிரா மத்தில் தற்காலிகமாக இயங்கி வரும் ஒட்டுசுட்டான் வைத்தியசா லையை நிரந்தர வைத்தியசாலை யாக மாற்றும் படி அவ்விடத்து மக்கள் வேண்டுகோள் விடுத்துள் ளனர்.

1977 ஆம் ஆண்டு காலப்பகு தியில் நடந்த வன்செயல்கள் கார ணமாக மலையகத்தில் இருந்து இங்கு வந்து காடுகளை அழித்து குடியேறிய மக்கள் கடந்த பலவரு டங்களாக எந்தவொரு மருத்துவ வசதியும், மருத்துவ நிலையங்கள் இன்றியும் மிக நெருக்கடியான நிலை யில் வாழ்ந்து வந்தனர். விஷத் தீண்டல்களினால் உடனடி மருத் துவ சிகிச்சையளிக்கக் கூட மருத் துவ நிலையம் இல்லாத காரணத் தால் சில உயிரிழப்புக்கள் கூட நிகழ்ந்துள்ளன. மூன்று கிராம சேவையாளர் பிரிவைக் கொண்ட றெட்பானா கிராமம் ஆயிரம் குடும்பங்களைக் கொண்டுள்ளது.

ஒட்டுசுட்டான் இடப்பெயர்வு காரணமாக கடந்த 8 வருடங் களாக றெட்பானா கிராமத்தில் தற் காலிகமாக இயங்கி வந்த ஒட்டு சுட்டான் வைத்தியசாலையினால் உடையார்கட்டு, விசுவமடு, பிரமந் தனாறு, குமாரசாமிபுரம், மயில் வாகனபுரம், தேராவில் போன்ற அயல் கிராமங்கள் நன்மைய டைந்து வந்ததுடன் இந்த வைத் தியசாலையினால் தொற்று நோய் ஆபத்தில் இருந்தும் சிறுசிறு நோயின் தாக்கத்தில் இருந்தும் மக்கள் விடுபட்டு வாழ்ந்து வந் தனர். தற்போது ஒட்டுசுட்டான் பிரதேசம் இராணுவ ஆக்கிரமிப் பில் இருந்து விடுபட்டு மக்கள் இயல்பு வாழ்க்கையை அடைந்த பின் றெட்பானா கிராமத்தில் இயங்கி வருகின்ற ஒட்டுசுட்டான் வைத்தியசாலையை மீண்டும் ஒட்டுசுட்டானுக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே ஒட்டுசுட்டான் வைத்தி யசாலை, ஒட்டுசுட்டான் சென்றால் மேலே குறிப்பிட்ட கிராமங்களில் வாழும் மக்கள் பல துன்பங்களை சந்திக்க நேரிடலாம். இந்த மக்கள் புதுக்குடியிருப்பு, தருமபுரம், கிளிநொச்சி போன்ற வைத்திய சாலைகளுக்குப் போகவேண் டும். எனவே இவற்றை எல்லாம் கருத்தில் கொண்டு சம்பந்தப் பட்டவர்கள் றெட்பானாவில் இயங்கி வருகின்ற ஒட்டுசுட்டான் வைத்திய சாலை ஒட்டுசுட்டான் செல்வதற்கு முன் நிரந்தர வைத்தியசாலை ஒன்றை அமைத்துத் தரும்படி அவ் வட்டத்து மக்கள் சம்பந்தப்பட்டவர் களை வேண்டி நிற்கின்றார்கள். (தீ)

# முழுமையாக பாதிக்கப்பட்ட மாணவர்களை தொடர்பு கொள்ள மா.பேரவை கோரிக்கை

**சுனாமியால் பாதிக்கப்பட்ட பல்கலைக்கழகம் கல்வியியற் கல்லூரி, தொழில்நுட்பக்கல்லூரி உயர் தொழில்நுட்ப நிறுவனம், ஆகிய உயர் கல்வி நிலை யங்களில் கல்வி பயிலுகின்ற மாணவர்களிற்கு சர்வதேச தமிழீழமாணவர் பேரவையினர் பணமும் உதவிப் பொருட்களும் வழங்கிவருகின்றனர்.**

இதனைப் பெற்றுள்ள போதும் சுனாமியால் முழுமையான அளவில் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்கள் தமது கல்வி யினைத் தொடர முடியாத நிலை யே இருந்து வருகிறது. எனவே இவ்வாறான நிலையில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாண வர்களிற்கு அவர் களின் உயர் கல்வியைப் பூர்த்தி செய்யும் வரை உதவு தொகை வழங்கத் தீர்மானித்துள்ளனர். எனவே முன்பு எம்மிடம் உதவு தொகை யைப் பெற்ற மாணவர் களாக இருப்பினும் முழுமை யாகப் பாதிக்கப்பட்டு தமது கல்வியினைச் சரியான முறையில் முன் னெடுக்க முடியாத நிலைக் குட் பட்ட மாணவர்கள் சரியான தகவல்களுடன் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையுடன் தொடர்பு கொண்டு தங்கள் தேவைகளை எமக்கு தெரியப்படுத்து வதனூ டாக அவர்கள் தமது கல்வி யினைப் பூர்த்தி செய்யும் வரை யில் அவர்களுக்கான சகல வசதி களும் ஒழுங்கு செய்து கொடுக் கப்படவுள்ளது. எனவே இவ் வாறான மாணவர்கள் உடனடி யாக சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையுடன் தொடர்பு கொள்ளு மாறு கேட்டுக் கொண் டுள்ளனர். இதுவரை இரண்டு இலட்சம் ரூபா பணமும் ஐந்து இலட்சம் ரூபா பொருட்களும் சர்வதேச மாணவர் பேரவையால் வழங்கப் பட்டுள்ளது என்றும் பேரவை தெரிவிக்கிறது.

# நாவற்குழி 300 வீட்டுத்திட்ட வீடுகளை புனரமைத்துத் தரக் கோரிக்கை

(தென்மராட்சி)

கடந்த கால போர் நட வடிக்கையாலும், இராணுவ உயர் பாதுகாப்பு வலயங்களாலும் இடம் பெயர்ந்து நாவற்குழி 300 வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் 160 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தாங்கள் குடியிருக்கும் எந்தவித அடிப்படை வசதிகள் அற்ற வீடு களை உடனடியாக புனரமைத்து தரும்படி கோரிக்கை விடுத் துள்ளனர். சாலை வசதிகளோ, கிணறு வசதிகளோ, மலசலகூட வசதி களோ ஏதும் அற்ற நிலையில் போரின் வடுக்களை சுமந்த வண்ணம் அவல வாழ்வு வாழ்ந்து வரும் இம்மக்களை திரும்பிப் பார்ப்பதற்கு கூட அரசோ அரசசார்பற்ற நிறுவனங்களோ இது வரை முன்வ ராதது குறித்து இம்மக்கள் கவலையடைந்துள் ளனர்.

-மக்களின் தற்காலிக வாழ்விடங்களில்-

# சுகாதார நிலைமைகள் மிக மோசம் அலட்சியத்துடன் அரச அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் சுனாமி கடற்பேரனர்த்தங்களால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள தற்காலிக வாழ்விடங்களில் அடிப் படைச் சுகாதார நிலைமைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டி ருப்பதாக பலராலும் சுட்டிக் காட் டப்படுகிறது.

பாதிக்கப்பட்ட மக்கள் செறிவாக தங்கியிருக்கும் இத் தகைய தற்காலிக வாழ் விடங்களில் உரிய மலசலகூட வசதிகள், குடிநீர்வசதிகள் என்பன போன்ற அடிப்படை சுகாதார வச திகள் இல்லாதுள்ளன. இதனால் இவ்வாறான இடங்களில் தங் கியுள்ளோர் தொற்று நோய் களுக்கு இலக்காகக் கூடிய அபா யம் உள்ளது. எனினும் அரசாங்க அதி காரிகள் இது குறித்து அலட்சியப் போக்குடனேயே நடந்து கொள் வதாகவும் குற்றம் சாட்டும் பொது மக்கள் சுகாதார நிலைமைகள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ள தமக்கு தமிழீழ சுகாதார சேவையினரது உதவி பெருந் தீவிரமாக இருப்பதாகவும் தெரிவித் துள்ளனர். (33)

-வடமராட்சி கிழக்கில்-

# ஆறு பாடசாலைகளை ஜி.ரி.இசட் புனரமைக்கும்!

சுனாமி கடற்கொந்தளிப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள வட மராட்சி கிழக்கின் ஆறு பாடசா லைகளில் மீள் கட்டுமானப் பணி களை மேற்கொள்ள ஜேர்மனிய தொண்டமைப்பான ஜி.ரி.இசட் முன்வந்துள்ளது.

"சுனாமி" கடற்கொந்தளிப் பினால் பாதிக்கப்பட்ட பாடசா லைகள் தொடர்பில் கல்வி அமைச்சில் இடம் பெற்ற ஜி.ரி. இசட் தொண்டமைப்புப் பிரதி நிதிகளுடனான சந்திப்பிலேயே இம் முடிவு பற்றி அறிவிக் கப்பட்டுள்ளது. ஜி.ரி. இசட் அமைப்பின் சார்பில் திட்ட முகா மையாளர் கலாநிதி ஹோர்த் கலந்து கொண்டிருந்தார்.

இச் சந்திப்பின் பிரகாரம் விடு தலைப்புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள ஆறு பாடசாலைகளில் மீள் நிர்மாணப் பணிகளை முன் னெடுக்கவே தற்போது ஜி.ரி. இசட் சம்மதம் தெரிவித்துள்ளது.

வெற்றிலைக்கேணி பர மேஸ்வரா வித்தியாலயம் மற்றும் வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன் பற்று உரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, கட்டைக்காடு உரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை என்ப வற்றுடன் தாளையடி றோமன் கத் தோலிக்க தமிழ்க்கலவன் பாடசா லை மற்றும் மணற்காடு தமிழ்க் கலவன் பாடசாலை என்பவையே மீள் நிர்மாணம் செய்யப்படவுள் ளது. (27)

# வடமராட்சி கிழக்கில் கட்டு மரம் மூலம் தொழில்

(வடமராட்சி)

சுனாமி கடற்கொந்தளிப்பு ஏற்பட்டு ஒரு மாத காலத்தினைக் கடந்துள்ள நிலையில் மீண்டும் கட்டுமரங்கள் மூலமான மீன் பிடித் தொழில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கடல் கொந்தளிப்பினால் பெரும் பாலான மீன்பிடி வள்ளங்கள் அழிந்துபோயுள்ளன. இந் நிலையி லேயே எஞ்சியுள்ள கட்டுமரங்கள் மூலமான மீன் பிடி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் குடத்த னைப் பகுதி கடற்பரப்பிலேயே இம் மீன்பிடித் தொழில் ஆரம்பிக் கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து முகாம் பகுதிகளில் தொடர்ந்தும் தங்கியுள்ள மீனவர்களினிடையே மன உளச்சலைத் தவிர்க்கும் நோக்கிலும் இயல்பு நிலையினைக் கட்டியெழுப்பவும் ஏதுவாகவே "விசேட செயலணிக்குழு" தொழில் நடவடிக்கைகளை மீள ஆரம்பிக்கும் நடவடிக்கையை முடுக்கிவிட்டுள்ளது. இதேவேளை வடமராட்சி வடக்கின் ஏனைய கரையோரக் கிராமங்களில் சேதமடைந்த நிலையிலுள்ள படகுகளைத் திருத்தி மீளத் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நோர்வேயினைச் சேர்ந்த "நோறாட்" எனும் உதவியமைப்பு இப் படகுகளை திருத்து வதற்கான மூலப் பொருட்களை வழங்கி வருகின்றது. (27)

# மக்கள் மத்தியில் மீன் குறித்த அச்சத்தைப் போக்க நடவடிக்கை

(வடமராட்சி)

மக்கள் மத்தியில் மீன் சாப்பிடு வது குறித்த அச்சத்தைப் போக்க சுனாமியால் பாதிக்கப் பட்டோருக்கான விசேட செய லணிக் குழு நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளது. மீன் உணவு தொடர்பான நம்பிக்கையினை மக்களிடையே கட்டி யெழுப்பும் முகமாக, முகாம்களில் தங்கி யுள்ள இடம் பெயர்ந்த மக்களிற்கு வழங்கப்படும் உணவில் மீனும், தற்போது சேர்க்கப்பட்டு, வழங்கப் பட்டுவருவதாக விசேட செயல ணிக்குழு வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (27)




ஆரிய குளம் சந்திக்கும் இலுப்பையடிச் சந்திக்கும் இடையில் உள்ள சந்திப் பகுதியில் உந்துருளியில் வந்தவர் மீது இராணுவப் பிக்கப் மோதியதில் உந்துருளியில் வந்தவர் படுகாயம் அடைந்ததுடன் உந்துருளியும் கடும் சேதத்திற்கு உள்ளாகியது கடந்த வாரம் இச் சம்பவம் இடம்பெற்றது.

(படம். ம.ஆன்சிலின்)

# சொந்த இடத்தில் மீளக்குடியேற அனுமதிக்குக! சனாதிபதிக்கு மணலாறு பிரதேச மக்கள் மகஜர்

மணலாறு பிரதேசத்திலிருந்து 21 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியேற்றப்பட்ட மக்கள் தமது மீள்குடியேற்றம் தொடர்பாக நட வடிக்கை எடுக்கவேண்டுமென கோரி சிறிலங்கா சனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்கவுக்கு மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள் ளார்கள்.

கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி கிராமங்களைச் சேர்ந்த மக்கள் போர்நடவடிக்கை காரணமாக 1984 ஆம் ஆண்டு வெளியேற நேர்ந் தது. போர்நிறுத்த சமாதான உடன் படிக்கையின் பின்பும் தமது கிராமத்திலிருந்து வெளியேற் றப்பட்ட இம் மக்களின் மீள் குடி யேற்றம் தொடர்பாக அரசு எந்தவித அக்கறையும் எடுக்க வில்லை. இந்த மக்களுடைய மீள் குடியேற்றம் தொடர்பாக முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதி பர் ஊடாக முன்னர் ஒரு தடவை தாம் சிறிலங்கா சனாதிபதிக்கு மகஜர் அனுப்பிவைத்த போதி லும் எந்தவிதஅக்கறையும் எடுக்க வில்லை. இடம்பெயர்ந்த இந்த மக்கள் அண்மையில் இடம்பெற்ற ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்தத் தருணத்திலாவது மீள்குடி யேற்றம் தொடர்பாக அரசு கவனம் செலுத்தவேண்டும் என மனுவில் சுட்டிக் காட்டப்பட் டுள்ளது. கொக்கிளாய் கரு நாட்டுக்கேணி கிராம அபிவிரு த்திச் சங்கத்தினால் இந்த மனு சிறிலங்கா சனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## சொத்தழிவு 38 இலட்சம் ரூபா

(பருத்தித்துறை)

வடமராட்சியில் ஏற்பட்ட கடற்கோள் அனர்த்தத்தினால் பருத்தித்துறைமுனை கடற் றொழிலாளர் கூட்டுவுச் சங்கத் திற்கு 38 இலட்சம் ரூபா சொத் தழிவு ஏற்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் அருள்தாஸ் தெரி வித்தார். (45)

# போராட்டத்திற்கு ஆதரவு கொடுப்போருக்கு அச்சுறுத்தல் கடிதங்கள்-மக்கள் பதட்டம்

(தென்மராட்சி)

கொடிகாமத்தில் சிலருக்கு கடுமையான அச்சுறுத்தல் வாசக ங்கள் அடங்கிய கடிதம் சம்பந் தப்பட்டவர்களின் இடங்களில் நேற்று முன்தினம் இரவு போடப் பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

தமிழீழ விடுதலைப் போராட் டத்திற்கு ஆதரவு கொடுப் பதில் இருந்து விலகி இருக்கும் படியும், கொடிகாமத்தில் மக்கள் போரா ட்டத்தின் போது துப்பாக் கியை நீட்டி கூட்டமுறப்பட்ட படையினர் இருவர் தாக்கப்பட்ட சம்ப வத் திற்கு பழிக்குப் பழி வாங்கப்படும் என்ற தொனியிலும் இது உங்க ளுக்கு இறுதிச்சந்தர் ப்பம் இக் கடிதத்தை உதாசீனம் செய்ய முற் பட்டால் படுகொலை செய்யப் படுவீர்கள் என்றும் கடிதத்தில் எழுதப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த அச்சுறுத்தல் கடிதம் குறித்து பொது மக்களிடையே பெரும் பதட்டம் தோன்றி இருப்ப தாகவும் தெரிய வருகிறது. (28)

**காலமை** பிள்ளையளுக்கு சாப்பாட்டைக் குடுத்துக் கொண்டிருந்தேன். அவரும் ஒரு மகளும் புதுக்குடியிருப்பு போயிருந்தனர். அப்ப கிபீர் வாறது மாதிரிச் சத்தம் கேட்டது. நான் கிபீர் வருகுதாக்கும் என்ன செய்யப் போறானோ தெரியாது எண்டு யோசிக்க "பிள்ளை ஏதோ சத்தம் கடுமையாக கேடகுது ஒருக்கால் என்னெண்டு பாரடி" என்று அம்மா கிணத்த டியில் நின்று கத்தினார்.

இதுக்குள்ளதான் எங்கயோ அடிக்கப் போறான் போல கிடக்கு எண்டு நினைச்சன். உடன அம்மாவும் வீட்டு வாசலுக்க வந்திட்டா என்ர கடைசிப் பிள்ளை (யுகதர்சன் வயது-03) வீட்டுக்குள்ளே இருந்து விளையாடிக் கொண்டிருந்தான். இப்படி இருக்க மற்ற மகன் (துஷ்யந்தன் வயது-16) வீட்டுக்கு வெளியால போய்ப் பார்த்திட்டு "அம்மா கடல் வருது" என்று பெரிதாகக் கத்திக் கொண்டு ஓடி வந்தான். நாங்கள் கடல் வரும் எண்டு நினைக்கவே இல்லை. கிபீர் அடிக்கப் போறான் என்ன செய்யிறது எண்டுதான் மண்டையைப் பிய்த்துக்கொண்டிருந்தோம்.

இப்படி இருக்க சின்னவனை அதாவது (யுகதர்சனைத்) தூக்கிக் கொண்டு சின்ன மகள் வித்தியானந்தி (வயது 14) கேற்றடிப் பக்கம் ஓடிக்கொண்டிருந்தாள். சின்னதுகள் இரண்டும் தனிய ஓடுகினம் எண்டுட்டு அம்மா கடல் வருகுதாம் கெதியாய் ஓடிவாண" எண்டு சொல்லிக் கொண்டு நானும் அவயளுக்குப் பின்னால ஓடிப்போனன். நான் வாசலுக்கு ஓடிப்போக இரண்டு பக்கத்தாலும் கடல் தண்ணி எங்களைத் தாண்டி ஓடிக்


யுகதர்சன்

நம்பிக்கை ஓரளவு வந்து விட்டது.

உடனடியாகவே அரவிந்தன் என்ர சின்னவனை என்னட்ட திருப்பித் தந்துவிட்டு எங்களை பிடிச்சுக் கொண்டு அவயின்ர பேசுக்குப் பின்னால இருக்கிற வகுப்பு மண்டபப் பக்கம கூட்டிக் கொண்டு போனார். அங்க போகமண்டபம் இடிஞ்சு விழுந்து கொண்டிருந்தது மண்டபத்தின் கூரை எங்களுடன் வருவது போல

பிள்ளை யுகதர்சனும், மகன் துஷ்யந்தனும் பக்குவமாய் இருந்தார்கள். அவர்களைக் கண்டதும் எனக்குப் போன உயிரில அரைவாசி திரும்பி வந்த மாதிரிக் கிடந்தது. ஆனால் மற்றப் பிள்ளை வித்தியானந்தியைக் காணவில்லை. அதை நினைச்சு நான் அழுது கொண்டிருக்க அரவிந்தன் இன்னும் ஒருவரைத் தண்ணிக்குள் இருந்து பிடித்து மரத்தில் ஏற்றினார். எனக்கு கண் எல்லாம் இருட்டின மாதிரிக் கிடந்தது. அதுதான் என்ர மற்றப் பிள்ளை. நாங்கள் எல்லோரும் உயிர் தப்பி விட்டோம். அரவிந்தன் எங்கள் எல்லோரையும் காப்பாற்றி விட்டார்.

மரத்தில் ஏறி இருந்தவேளை எங்கள் கால்களை தொட்டது போல கடல் ஓடிக் கொண்டிருந்தது. அதற்குள்ளால் அடிபட்டு ஒரு சின்னப் பிள்ளை வந்தது. அந்தப் பிள்ளையை என்ர பிள்ளை வித்தியானந்தி எட்டிப் பிடித்து விட்டாள். பிடித்த பிறகுதான் பார்த் தோம். அது எங்கள் வீட்டுக்கு பக்கத்தில இருக்கிற குயின்சி என்ற நாலாம் ஆண்டு படிக்கிற சின்னப்பிள்ளை அவனும் நல்லாய் தண்ணி குடிச்சு விட்டான். அதில

எங்கள பக்குவமாய் கூட்டிக் கொண்டு போய் சேத்து விட்டார்.

இதுக்கிடையில நாங்கள் மரத்தில இருக்கேக்க என்ரபிள்ளையள் "அம்மம்மா அம்மம்மா" எண்டு கத்திக் கூப்பிட "ஓம் நான் இருக்கிறன் நீங்கள் எங்க இருக் கிறியள் பாதுகாப்பாய் இருங்கோ" என்று குரல் கேட்டது அதுக்குப் பிறகு அம்மாவைக் காணவே இல்லை அவரின் பொடியைக் கூட நாங்கள் எடுக்கவில்லை என்று கூறி விம்மத் தொடங்கினார் அந்தத் தாய்.


சிறிது நேரம் கழித்து நான் இப்படி எல்லாம் தப்புவன் எண்டு நினைக்கவே இல்லை என்னெண்டு தப்பினம் எண்டுறதே பெரிய ஆச்சரியமாய் இருக்கு. இப்படி வந்த கடலுக்குள்ளால தப்புறது எண்டுற விசயம் கனவிலயும் நடக்காது. ஏதோ நாங்கள் அரவிந்தன்ர பேசுக்குப் போனதால தான் தப்பினம். நான் ஓடிப் போய் "ஐயோ கடல் வருகுது எங்களைக் காப்பாற்றுங்கோ எண்டு



**சுனாமி பேரலைகள் முல்லைத்தீவை தாக்கிய வேளை அதில் சிக்குண்டு தத்தளித்துக்கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வரைக் கடற்படைப் போராளி ஒருவர் காப்பாற்றி இருந்தார். அவ்வாறு காப்பாற்றப்பட்டவர்களில் ஒருவரான ரா.ஆனந்த நாயகி (வயது 40) என்ற தாயார் தாங்கள் எப்படித் தப்பினார்கள் என்பதை விபரிக்கிறார்.**

பகுதி—13

# அந்த பேசுக்குள் போயிருக்காட்டில் நாங்கள் எல்லாரும் செத்திருப்பம்


உயிர் தப்பியவர்கள்

கொண்டிருந்தது. அதைப் பார்க்க எனக்குப் பயமாக இருந்தது. எனக்கு முன்னால ஓடின இரண்டு பிள்ளையளும் வீட்டுக்கு நேரமுன்னுக்குகிருந்த அரவிந்தன் ஆக்களின் பேசுக்குப் போய் நின்றார்கள். நானும் உடனே அங்கதான் ஓடிப்போனன்.நான் அங்க போக தண்ணியும் கூடிவிட்டது. எனக்கு என்ன செய்யிறது எண்டுகூடத் தெரியவில்லை. திகைப்பாக இருந்தது. நாங்கள் குடும்பத்தோட அழியப் போறம் எண்டு நினைச்சு திகைத்துப்போனன்.

இப்படி இருக்க அரவிந்தன் என்கிற இயக்கத் தம்பி வெளியால வந்தார். நான் உடனேயே என்ர கடைசி மகன் யுகதர்சனை அவரிடம் கொடுத்து விட்டு என்ர பிள்ளையள் எல் லோரையும் அணைச்சு அரவிந்தனை கட்டிப்பிடிச்சு எங்களைக் காப்பாற்றுங்கோ எண்டு கத்தினேன். எல்லோரும் சேர்ந்து அரவிந்தனைக் கட்டிப்பிடிச்சதால அவரால் ஒண்டும் செய்ய ஏலாமல் போட்டுது " அக்கா நீங்கள் என்னை விட்டால்தான் நான் என்னெண்டாலும் செய்யலாம்" எண்டு சொன்னார். இப்ப எனக்கு நாங்கள் தப்பிவிடுவம் என்ற

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

மெல்லமாக அசைந்து கொண்டி ருந்தது. இப்படி இருக்க தண்ணீர் கூடி விட்டது. நாங்கள் எல்லோரும் ஒரு முறை தாண்டு எழும்பினோம். மேலே எழும்பிப் பார்த்த போது அரவிந்தனும் தாண்டு எழும்பினார். நான் உடனே அரவிந்தனிடம் என்ர சின்னப்பிள்ளையைத் திரும்பவும் கொடுத்தேன். நாங்கள் தான் தப்பாமல் விட்டாலும் அந்தப் பிள் ளையாவது தப்பட்டும் என்று நினைச்சுத்தான். அரவிந்தனிட்டப் பிள்ளையைக் குடுத்தன் குடுத்திட்டு நிற்க பிறகும் நாங்கள் தண்ணீக்குள்ள தாண்டு தாண்டு இழுபட்டுக் கொண்டு போனம். அரவிந்தன் எங்க நிக்கிறார் எண்டு கூட தலையை நிமிர்த்திப் பார்க்க ஏலாமல் இருந்தது. அந்தளவுக்கு தண்ணி விட வில்லை. நாங்களும் தண்ணி குடிச்சுப்போட்டம்.

எங்களுக்கு நிலத்தில் கால் முட்ட வில்லை. அந்தளவுக்கு தண்ணி ஏறிவிட்டது. எதுவுமே தெரியவில்லை. எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்றும் தெரியவில்லை. சரி நாங்கள் முடியப்போறோம் எண்டு நினைச்சன். அதுக்குள்ளேயும் என்ர பிள்ளையளைப் பற்றித்தான் நினைச்சன்.

தண்ணீக்குள்ளால தத்தளிச்சுக் கொண்டு இழுபட்டுப் போய்க் கொண்டிருக்க ஒரு கை வந்து என்னைப் பிடிச்சு இழுத்தது. எனக்கு உயிர் வந்த மாதிரிக் கிடந்தது. நிமிர்ந்து பார்த்தேன். அரவிந்தன் ஒரு மரத்தில ஒருகையைப் பிடிச்சுக் கொண்டு மற்றக் கையால என்னைப் பிடிச்சு மரத்தில ஏத்தினார். மரத்தில ஏறின உடனே மரத்தின்ர மற்றக் கொப்பைப் பார்த்தேன். அதில் என்ர சின்னப்

நாங்கள் பிடிக்காட்டில் அவனும் தப்பியிருக்க மாட் டான். இப்ப அவன்ர வீட்டுக்காரர் எல்லோ ரும் கடல் அடிச்சு செத்துப்போச்சினம் அவன் மட்டும் தான் தப்பி இருக்கிறான். மரத்தில் இருந்து பாக்கேக்க பெரிய வீடுகளுக்கு மேலால எல்லாம் தண்ணி தான் தெரிஞ்சது.

இப்படியே ஒரு கட்டத்தில கடல் மெது வாய் வத்திக்கொண்டு போனது ஒரு அளவான தண்ணி வர அரவிந்தன் கீழ இறங்கிப் பாத்திச்சுது கழுத்தளவு தண்ணி அதால அங்கால கொஞ்சத்தூரம் போய் பாத்திட்டு வந்து " மரத்தால இறங்கி வாங்கோ அங்கால பாதுகாப்பான இடத்துக்கு போவம்" எண்டு சொன்னார். அரவிந்தன் சொன்ன உடனயே எல்லாரும் கீழ இறங்கிப் போட்டினம் நான் தான் மரத்தில நிண்டனான். எனக்கு இறங்கத் தெரியாது என்ன செய்யிறது. அடுத்த அலை வாறதுக்கிடையில போகவேணும் எண்டுட்டு அந்த உயரமான மரத்தில இருந்து கையை விட்டுட்டன்.

கையைவிட்ட உடன கீழ இருக்கிற தண்ணீக்குள்ள விழுந்தன் கீழ விழுந்த உடனயும் என்ர உடுப்பெல்லாம் தும்பு தும்பாக கிழிஞ்சு போச்சுது. எனக்கு என்ன செய்யிறது எண்டு தெரியேல்ல. உடனேயே அரவிந்தன் தான் போட்டிருந்த சேட்டை கழட்டி என்னட்ட தந்தார். ஒவ்வொரு காலடியாய் எடுத்து வைச்சு பார்த்து பார்த்து

கத்தேக்குள்ள அரவிந்தன் பதற்றப்படவே இல்லை. அவற்ற முகத்தில ஒரு மாற்றமும் தெரியேல்ல. நாங்கள் பயந்து நடுங்கிக் கொண்டு நிக்கிறம் அவர் பயப்பிடாமல் உறுதியாய் நின்றார். அப்படி நிண்டிராட்டால் நாங்கள் தப்பி இருக்கமாட்டம். ஏதோ கடவுள் மாதிரி அரவிந்தன் எங்களைக் காப்பாற்றிப் போட்டுது. அந்த இடத்தில ஒருத்தராலையுமே தாக்குப்பிடிக்க ஏலாமல் போனது ஏன் கட்டடங்கள் மரங்கள் கூட தாங்க ஏலாமல் இடிஞ்சும் முறிஞ்சும்


**அ.லோகீசன்**

விழுந்து கொண்டிருந்த அந்த நேரத்தில இந்தப் போராளியால் இத்தனை பேரையும் துணிந்து நின்று காப்பாற்ற எப்படி முடிந்தது. நினைக்கவே முடியாமல் இருக்கிறது" என்றார் அந்தத் தாய்.

முல்லைத்தீவைப் பேரலைகள் மூர்க்கமாகத் தாக்கிய வேளை நகர பேருந்து நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பேருந்தை எடுத்துக்கொண்டு பெருமளவான மக்களையும் ஏற்றிகொணடு புத்தி சாதுரியமாக அபாயப் பகு திக்கு வெளியில் கொண்டுசென்ற தமிழ்ழ போக்கு வரத்துக்கழக சாரதி ஒருவரின் வினோதமான அனுபவத்தை அடுத்த தொடரில் வாசகர்களுக்காகத் தருகிறோம்.

தொடரும்...







ஆழிப்பேரனர்த்தத்தில் உயிரிழந்த உறவுகளை நினைத்து...

# 24-01-2005-30-01-2005




**24**

*சுனாமி நிவாரணச் செயற்பாடுகள் குறித்து வடக்கு-கிழக்கு அரச உயரதிகாரிகளுடன் அரசியல் துறைப் பொறுப்பாளர் உள்ளிட்ட குழுவினர் ஆராய்வு.



*நோர்வேப்பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்துப் பேச்சு.

*.மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பணிமனையில் விடுதலைப்புலிகளுக்கும்- முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு மிடையே சந்திப்பு.

*வெள்ளவத்தையில் இனம் தெரியாதோரால் தமிழ் இளைஞன் சுட்டுக் கொலை.

*தமிழீழ தேசியத் தலைவரின் படத்தை காரைதீவில் ஜே.வி.பி யினர் அடித்து நொருக்கியமையால் மக்களுக்கும் அவர்களுக்குமிடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

*நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் நாடு திரும்பினார்.


*கொரிய குழு மற்றும் கொரிய பல்கலைக்கழக மாணவர்கள் அடங்கிய 40 பேர் யாழ் விஜயம்.

*ஒஸ்திரிய வெளிவிவகார அமைச்சர் ஹூர்சுலா பிளஸ்னிக் பிரதமரை அலரிமாளிகையில் சந்தித்தார்.

**2 5**

*அம்பாறை மாவட்டம் காஞ்சிரங்குடாவிலிருந்து திருக்கோயில் நோக்கி சென்று கொண்டிருந்த இரண்டு போராளிகள் மீது சிறிலங்காப்படையினர் நடத்திய தாக்குதலில் அவர்கள் காயமடைந்தனர்.

*முல்லைத்தீவில் காணாமற் போனோர் நினைவாக நினைவுப் பேழை அடக்கம். அத்துடன் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களிலும் நினைவு கூரும் நிகழ்வு இடம் பெற்றது.



**2 6**

*சுனாமி கடல் அனர்த்தம் காரணமாக தமிழர் தாயகப் பகுதியிலும் தெற்காசிய நாடுகளிலும் உயிரிழந்த உறவுகளை நினைவு கூரும் 31 ஆம் நாள் நிகழ்வு தமிழர் தாயகமெங்கும் உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிக்கப்பட்டது.

* முல்லைத்தீவு ஆழிப்பேரலையினால் தாய் தந்தையரை இழந்த சிறார்களின் பெயரில் ரூபா 10.000 வீதம் வங்கி வைப்பிலிடப் பட்ட புத்தகங்கள் சிறார்களிடம் கையளிக்கப்பட்டது.



* புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற வீதி விபத்தில் மூவர் பலி.


**2 7**

* சுனாமிப் பேரலையால் முற்றாக அழிவடைந்து போயுள்ள முல்லைத்தீவு, வடமராட்சிகிழக்குக் கரையோரப் பிரதேசங்களை தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் பார்வையிட்டார் அத்துடன் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியிருக்கும் மக்களைச் சந்தித்து உரையாடிய வேளை அனர்த்தப் பேரழிவுச் சூழ்நிலையில் அரசு தனது அதிகாரத்தை நிலை நாட்டி அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முயல்கின்றதென சுட்டிக்காட்டினார்.



* ஐக்கிய அமெரிக்க சமாதான அமைப்பின் பணிப்பாளர் வஸ்கியுஸ் இலங்கைக்கு விஜயம்.

* தாளையடியில் அமைத்த புதிய படகுக்கட்டுமான பயிற்சிக் கல்லூரியை திருமதி அடேல்பாலசிங்கம் திறந்து வைத்தார்.



* சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் நிவாரண, புனரமைப்புப் பணிகளில் அரசு, புலிகள் ஏனைய நிறுவனங்கள், ஐ.நா. ஸ்தாபனங்கள் அனைத்தும் ஒருங்கிணைந்து செயற்படுவது தொடர்பான கலந்துரையாடல் யாழ் செயலகத்தில் நடைபெற்றது.

* கடற்கோள் அனர்த்த நிவாரணப் பணிகளில் ஈடுபட இலங்கை வந்திருந்த இந்திய கடற்படையினர் தமது பணிகளை நிறைவு செய்து கொண்டு இந்தியா திரும்பும் முன்னர் சனாதிபதி மாளிகையில் சந்தித்து சனாபதிபதியால் ஞாபகச் சின்னமொன்று கையளிப்பு



*எதிர்க்கட்சித் தலைவர் வெலிக் கடை சிறைச்சாலையில் உள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸாநாயக்கவைச் சென்று பார்வையிட்டார்.

* நெதர்லாந்தின் டென்ஹக் நகரிலுள்ள வெளி விவகார அமைச்சக கட்டடத்தில் நெதர்லாந்து பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளும் சந்தித்தனர்.



* ஐ.தே கட்சியின் தலைவர் ரணில் நோர்வேக்குப் பயணம்.

* விளையாடுவோம் வாசிப்போம் நூல் அறிமுகவிழா கிளி/ ம.வி மண்ட பத்தில் இடம்பெற்றது.



**28.** விடுதலைப்புலிகளின் மட்டு-அம்பாறை மாவட்டத் சிறப்புத தளபதி கேணல் பானு அவர்களும், திருமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் அவர்களும் கிளிநொச்சிக்கு விஜயம்.

* தென்கொரிய உயர் மட்டக் குழுவினர் யாழ். விஜயம்.

*இராணுவமும், பொலிசாரும் அண்மைக் காலமாக மேற்கொண்டு வரும் அராஜகங்களைக் கண்டித்தும், சுனாமி நிதியை அரசு ஆயுதக் கொள்வனவுகளுக்குப் பயன்படுத்துதல், தமிழர் பிரதேசம் திட்டமிட்டு புறக்கணிக்கப்படுதல் என்பவற்றைக் கண்டித்து மன்னாரில் கண்டனப் பேரணி இடம்பெற்றது.



* வடகிழக்கு, தென்பகுதி கரையோரத்தை "சுனாமி" பேரலைகள் மீண்டும் தாக்கலாம் எனப் பரவிய செய்தியால் அப்பகுதிகளில் பெரும் பரபரப்பு.

**29.**

* விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவரது துணைவியார் அடேல் பாலசிங்கம் அவர்களும் கிளிநொச்சியிலிருந்து லண்டனுக்குப் பயணம்.



* ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பணிகளை மேற்கொள்ள இலங்கை வந்துள்ள அமெரிக்கப் படையினர் இம் மாதம் 15 ஆம் திகதியுடன் முற்றாக வெளியேறுவர் என அமெரிக்க படைகளுக்கான தளபதி பிரிகேடியர் ஜெனரல் பிராங் கொழும்பில் செய்தியாளர் மாநாட்டில் தெரிவிப்பு.

* மன்னாரில் டைனமைற் வெடித்து மீனவர் பலி.

* ரணில் நோர்வேயில் எரிக்சூல் ஹெய்மை சந்தித்துக் கலந்துரையாடினார்.

* சுனாமியால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களை விடுதலைப்புலிகளின் மட்டு அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தலைமையிலான பிரதிநிதிகள் பார்வையிட்டனர்.

**30.**

* நீர் கொழும்பில் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொலை.

* யாழ். விஜயம் செய்த கடற் றொழில் நீரியில் வள அமைச்சின் பணிப் பாளர் நாயகம் பியசேன யாழ். அலுவலகத்தில் சந்திப்பில் ஈடுபட்டார்.

# சுனாமியால் பாதிப்புற்ற மக்களுக்கான உதவிகள்

# உரிய வகையில் சென்றடையாமை குறித்து விசாரணை!

## -அரசின் உதவி வழங்கலில் பாரிய மோசடி

ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பகிர்ந்தளிக்க வென அரசாங்கம் வழங்கியுள்ள நிதி மற்றும் நிவாரணங்கள் மக்களை சென்றடையவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக ஆராய்வதற்கு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரினால் அரசாங்கத்தின் உயரதிகாரிகள் குழுவொன்று நாட்டின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. குறிப்பாக காலி, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் ஆழிப் பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி உதவிகள் உரியமுறையில் சென்றடையவில்லையென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். இந்த அனர்த்தத்தினால் உயிரிழந்த ஒருவருக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் 15,000 ரூபா நிதி அநேகமான குடும்பங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென தெரிவிக்கப்படுகிறது. இந்த அனர்த்தத்தின் போது பாதிக்கப்பட்ட வீட்டு உபகரணப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்படும் 2,500 ரூபா கொடுப்பனவும் இவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லையென இது தொடர்பாக ஆராய்ந்து வரும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நிவாரண உதவிகளில் ஊழல் மோசடியில் ஈடுபடுவோர்க்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக் ரணவிராஜா கூறியுள்ளார்.

# முஸ்லிம் காங்கிரசிற்குள் மீண்டும் உட்பூசல்

# ஆளும் கட்சிக்கு தாவ சிலர் முயற்சி!

## -கட்சித் தலைமை மீதும் அதிருப்தியே காரணம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிற்குள் மற்றுமொரு உட்பூசல் தோன்றியிருப்பதாக அக்கட்சிக்குள் இருந்து வெளியாகியுள்ள தகவல்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கட்சியின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கே.எம்.பாயிஸ், அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஆகியோரே இந்த உட்பூசல்களுக்கு பிரதான காரணம் என தெரியவருகின்றது. கட்சியின் தலைமையில் கே.எம்.பாயிஸ் அதிருப்தியடைந்த நிலையில் காணப்படுகின்றார். ஏற்கனவே தலைவர் ரவூப் ஹக்கீமிற்கு மிக நெருக்கமானவர், நம்பிக்கையானவர் என கருதப்பட்ட இவர் தற்போது அவரையும் கட்சித் தலைமையையும் விமர்சித்து வருகின்றார். கட்சி புனரமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி வலியுறுத்தும் அவர், இது தொடர்பாக கட்சித் தலைமைப்பீடத்துடன் எழுத்து மூலம் சில யோசனைகளை முன்வைத்துள்ளார். இதேவேளை ஏற்கனவே ஆளும் கட்சிக்கு பாய்வதற்கு தயாராகவிருந்து சற்று பின்னின்ற அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் ஆழிப் பேரலையினால் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய புனரமைப்புகள் ஆகியவற்றை சாதகமாகப் பயன்படுத்தி ஆளும் கட்சிக்குப் பாய்வதற்கு மீண்டும் தயாராகி வருகின்றார். அண்மையில் ரவூப் ஹக்கீம் பைசால் காசிமின் சொந்த பிரதேசமான நிந்தவூருக்கு சென்ற சமயம் ஆதரவாளர்கள் பைசால் காசிமை அமைச்சராக்கி தாருங்கள் என்று கோசமெழுப்பினார்கள். இதற்கு பதிலளித்து உரையாற்றிய ரவூப் ஹக்கீம், எமது கட்சியில் இருப்பவர்கள் இருக்கட்டும். பதவிக்கு ஆசைப்பட்டு இருக்க விரும்பாதவர்கள் விரும்பினால் வெளியேறட்டும் என்று கூறியுள்ளார்.

# வடக்கு-கிழக்கு மக்களுக்கும் வீடுகள் அமைத்துத் தரப்படும்

## -பாகுபாடு காட்டப்படாதென்கிறார் பிரதமர்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதிகளிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படும் என பிரதமர் மகிந்தராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் எந்த விதமான பாகுபாடுகளும் காண்பிக்கப்பட மாட்டாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாத்தறையில் சுனாமியால் இறந்த மக்களுக்கான அஞ்சலி நிகழ்வில் கலந்கொண்டு உரையாற்றும் போது பிரதமர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

# தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையம் சிறிலங்காவில் அமைக்க நடவடிக்கை

பலம் வாய்ந்த தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையமொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இதெற்கென வெளிநாடுகளின் ஆலோசனைகள் பெறப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். மத்திய மற்றும் சிறியளவிலான பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் கிராமிய மனிதவள அபிவிருத்தி அமைச்சின் தேசிய அனர்த்த படையணியின் முதலாவது அனர்த்த முகாமைத்துவ பாடநெறியைப் பூர்த்திசெய்த இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. சனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் உரையாற்றிய சனாதிபதி, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளில் அனர்த்தங்கள் அடிக்கடி ஏற்படுவதால் அங்கு மிகவும் சிறந்த அனர்த்த முகாமைத்துவ நிலைய[illegible]கள் உள்ளதாகக் கூறினார். இ[illegible]த அனர்த்த முகாமைத்துவ நிலை[illegible]த்தை சர்வதேச தரத்திலான நிலையமாக்கி அனர்த்தம் தொடர்பான அமைச்சுக்களுடன் இணைக்கப்படுமெனவும் சனாதிபதி தெரிவித்தார்.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளை புனரமைக்க ஒப்பந்தம் கைச்சாத்து

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாட சாலைகளைப் புனரமைக்கும் வகையிலான ஒப்பந்தம் நேற்று முன் தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. நிதியமைச்சில் இந்த ஒப்பந்தம் கைச் சாத்திடப்பட்டதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த நிதியமைச்சர் சரத் அமுனு கம சுனாமியின் காரணமாகப் பாதிக்கப்பட்ட நாட்டில் உள்ள 176 பாடசாலைகளைப் புனரமைக்கும் வகையிலான முதலீடுகளை பெற்றுக்கொண்டதாகவும், அதன் அடிப்படையில் குறிப்பிட்ட பாடசாலைகளை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டார். இந்தப்பாடசாலைகள் சுமார் ஒன்பது மாதகாலப்பகுதிக்குள் புனரமைக்கப்படும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.(32)

# பின்லாந்து வெளியுறவு அமைச்சர் இலங்கை வருகை

# அந்நாட்டின் மருத்துவக்குழு 2010 வரை சேவை

பின்லாந்து நாட்டின் வெளிவிவகார அமைச்சர் எதிர்வரும் சனிக்கிழமை இலங்கை வரவுள்ளார்.

மீள்கட்டுமானம் தொடர்பான நீண்டகால அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி செய்வது மற்றும் ஒத்துழைப்பு நல்குவது ஆகியவை குறித்து கலந்துரையாடவே அவர் இங்கு வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. பின்லாந்து அரசின் நீண்ட கால உதவித்திட்டத்தின் ஒரு அங்கமாக அந்நாட்டின் மருத்துவர் குழு ஒன்று கடந்த மாதம் 6ஆம் திகதி இலங்கை வந்திருந்தது. கல்முனை பொத்துவில் ஆகிய இடங்களில் இந்தக்குழுவினர் சேவையாற்றியுள்ளனர். சுமார் 1,400 நோயாளிகளுக்கு வைத்தியம் செய்துள்ளனர். அந்நாட்டு மருத்துவர் குழு 2010ம் ஆண்டு வரை இலங்கையில் தங்கியிருந்து சேவையாற்றும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுனாமி பாதித்த மாவட்டங்களில் சனத்தொகை கணக்கெடுப்பு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சனத்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

சிறிலங்காவில் சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. சுனாமியால் பாதிக்கப்பட்டவர்கள் இறந்தவர்கள் மற்றும் காணாமல் போனோர் போன்ற விபரங்களை உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கு இது உதவும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

## -சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல இருந்தனராம்-

# ஆறு தமிழ் இளைஞர்கள் தலவாக்கலையில் கைது!

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்வதற்காக தலவாக்கலை பிரதேசத்தில் தங்கியிருந்த ஆறு தமிழ் இளைஞர்கள் சிறிலங்காப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களை நேற்று முன்தினம் பொலிசார் நுவரெலிய நீதிமன்றத்தில் ஆஜர் செய்த போது எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது. இவர்கள் ஏற்கனவே சட்ட விரோதமாக வெளிநாடு ஒன்றுக்குச் செல்ல முற்பட்ட வேளையில் கிராண்ட்பாஸ் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15-12-1978

உதிர்வு 02-02-1999



**பரராசசிங்கம் கலைச்செல்வி**

**A.P.R தொலைத்தொடர்பகம்**

**மகாறம்பைக்குளம்**

**வவுனியா**

ஐயிரண்டு திங்களாய் அவனியிலே
உன்னை ஈன்றெடுத்த அன்னை
பரிதவிக்க ஆசைத்தம்பிகளுடன்
அப்பாவையும் தவிக்க விட்டுச்
சென்று ஆண்டுகள் ஐந்து ஆனதம்மா.

உன்பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதரர்கள், அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, மாமி, சித்தப்பா, சித்திமார்.

தகவல்:
செல்வம் பல்பொருள் வாணிபம். (A.P.R)
நெடுங்கேணி.

(5612)

# சாவு அறிவித்தல்

## கந்தசாமி நல்லதம்பி

மயிலியதனையை பிறப்பிடமாகவும் தற்போது யாழ்.வீதி உடுப்பிட்டி வாசிகசாலையடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி நல்லதம்பி அவர்கள் 29.01.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி செல்லம்மாவின் அன்புப் புதல்வரும் சிந்தாமணி காந்தியம்மாவின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், நகுலேந்திரன் (கண்ணன், சேவாலங்காமன்றம்) கலை வாணன் (F.R.C) யாழ்ப்பாணம் கவிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயவாணியின் அன்பு மாமனாரும், ஞானாம்பாள் (கனடா) தங்கப்பாக்கியம் (டென்மார்க்) காலஞ்சென்ற துரைராசசிங்கம் செல்லப் பாக்கியம் (தாதி உத்தியோகத்தர் தெல்லிப்பழை), குணபாலசிங்கம் (லண்டன்), அழகரத்தினம், வீரசிங்கம், இரத்தின சிங்கம் (பிரியா ஸ்டோர்ஸ் மட்டக்களப்பு), அன்னலட்சுமி, மகேந்திர ராணி (அமெரிக்கா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் 3.02.2005 (வியாழக்கிழமை) காலை 11.00 மணிக்கு ஈமக்கிரிகைகள் நடைபெற்று மயிலியதனை இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

யாழ். வீதி
உடுப்பிட்டி வாசிகசாலையடி,
உடுப்பிட்டி.

தகவல்:-
மனைவி,
பிள்ளைகள்.

(5620)

# 742 கோடி ரூபா செலவில் இந்தியா கரையோர பாதுகாப்புத் திட்டம்

(புதுடில்லி)

இந்தியா தனது கரையோர பாதுகாப்பை மேலும் பலப்படுத்துவதற்கு 742 கோடி ரூபா செலவிலான திட்டம் ஒன்றை அமுல் படுத்தவுள்ளது.

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட கடல் ரோந்துப் பாதுகாப்பு மற்றும் தற்போது அமுலில் உள்ள சில பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மேலதிகமாக இந்தப் புதிய திட்டம் அமையும் எனக் கூறப்படுகின்றது. தீவிரவாதிகளின் ஊடுருவல் மற்றும் கடத்தல் சம்பவங்களை முற்றாகக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்தப் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

கடல் குற்றங்களை கட்டுப்படுத்துவதற்கு கரையோரப் பொலிஸ் நிலையங்கள் அமைப்பு மற்றும் விசேட ரோந்து நடவடிக்கைகள் ஆகியவை உட்பட பல முக்கிய உபாயங்கள் அடங்கிய திட்டமாகவும் இது இருக்கும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பாதுகாப்பு ஆலோசகராக எம்.கே.நாராயணன் பதவியேற்ற பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்புத் துறை சார் நடவடிக்கை இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

# ஜம்மு–காஷ்மீரில் நகராட்சித் தேர்தல்

(புதுடில்லி)

ஜம்மு-காஷ்மீரில் ஜம்மு மற்றும் ஸ்ரீநகர் நகராட்சித் தேர்தல் நேற்று விறுவிறுப்புடன் இடம்பெற்றது. ஜம்மு நகரத்தில் 70 நகராட்சித் தொகுதிகளில் சுமார் 537 வேட்பாளர்கள் களத்திலுள்ளனர். ஸ்ரீநகரிலுள்ள 68 நகராட்சித் தொகுதிகளில் 217 வேட்பாளர்கள் களத்திலுள்ளனர். தேர்தல் அதிகாரிகள் ஜம்முவில் 399 வாக்குச்சாவடிகளையும் ஸ்ரீநகரில் 573 வாக்குச்சாவடிகளையும் அமைத்துள்ளனர். ஜம்மு நகரத்தில் இடம்பெற்று வரும் நகராட்சித் தேர்தலில் சுமார் 7 இலட்சத்து 70 ஆயிரம் வாக்காளர்கள் வாக்களிப்பார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

# தி.மு.க தலைமையில் தேர்தலை சந்திப்போம்

# டாக்டர் ராமதாஸ் திட்டவட்டமாக அறிவிப்பு

(சென்னை)

தமிழக சட்டசபை தேர்தலை தி.மு.க தலைமையில் சந்திப்போம் என்று பா.ம.கட்சி நிறுவுனர் டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

பொதுவாக ஆளுநர் உரையில் அரசியல் கொள்கை முடிவுகளும் நிறைவேற்ற இருக்கும் திட்டங்களும் கோடிட்டு காட்டப்படும். ஆனால் அ.தி.மு.க ஆட்சியில் 2001 இல் தொடங்கி 2004 ஆம் ஆண்டு வரையில் நிகழ்த்தப்பட்டுள்ள 4 கவர்னர் உரைகளையும் புரட்டிப்பார்த்தால் அதிகமாக இடம் பெற்றிருப்பது முதலமைச்சரை துதிபாடுவது தான். கடந்த ஆண்டு ஆளுநரின் உரை 45 பக்கம் இருந்தது. இதில் 25 இடத்தில் முதல்வரை பாராட்டுவது தொடர்பான வாசகங்களே இருந்த ஆளுனர் உரையில் வெறும் விளம்பரத்திற்காக இடம் பெறும் வாக்குறுதிகளும் நிதி நிலை அறிக்கைளில் அறிவிக்கப்படும் திட்டங்களும் ஆண்டுக்கணக்கில் நிறைவேற்றப் படாமல் இருக்கிறது.

நான் சொல்வது 2001 முதல் 2004 ஆம் ஆண்டு வரையிலான காலமாகும். 2001 இல் அ.தி.மு.க அரசு வந்ததும் ஆளுநர் பாத்திமா பேபியால் கவர்னர் உரையில் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் கூட இன்னும் நிறைவேற்றப்படவில்லை. ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு, 100 பேருக்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமத்திற்கு ஒரு குடிநீர் ஆதாரம், சென்னை மாநகர மக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்ற 2 புதிய நீர்த் தேக்கம், 2001 செப்ரெம்பருக்குள் கூட்டுறவு தேர்தலை நடத்தி முடிப்போம், ஊராட்சி ஒன்றிய தலைவர்களை மக்களே நேரடியாக தேர்வு செய்ய அரசியல் சட்டத்தை திருத்துவோம். அனைவரும் நோயற்ற வாழ்வு வாழ நடவடிக்கை எடுப்போம், ஓராசிரியர் பள்ளிகளே இல்லாமல் ஆக்குவோம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை 27 சதவீதத்தில் இருந்து 50 சதவீதமாக உயர்த்துவோம், கச்ச தீவை மீட்க மத்திய அரசை வலியுறுத்துவோம், மாநில நிர்வாகத்தில் தமிழ் மொழி பயன்பாட்டை அதிகப்படுத்த நடவடிக்கை மேற்கொள்வோம் என கூறியிருந்தனர்.

இப்படி 4 ஆண்டுகள் ஆகியும் அவர்கள் சொன்ன வாக்குறுதிகளில் ஒன்று கூட இதுவரையில் நிறைவேற்றப்படவில்லை. முதலாவது ஆளுநர் உரையில் சொல்லிய வாக்குறுதிகளே இன்னும் நிறைவேற்றப்படாத நிலையில் இருக்கிறது. இவர்கள் ஆட்சி அடுத்த ஆண்டு இருக்கப் போவது இல்லை. ஆளுநர் இருப்பார் ஆனால் ஆட்சி இருக்காது. எனவே கடந்த 4 ஆண்டில் கவர்னர் உரையிலும் நிதி நிலை அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் என்ன? அவற்றில் நிறைவேற்றப்பட்டது எவை எவை? என்பது பற்றி அரசு செயல் அறிக்கை ஒன்றை தயாரித்து அதனை வெள்ளை அறிக்கையாக சட்டமன்றத்தில் வைக்க வேண்டும் என்று எங்களது கட்சி தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

தமிழ் நாட்டில் 26 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் கிடுகிடுவென குறைந்து வருகிறது. ஆனால் முதல்வர் நீர் மட்டம் குறையவில்லை என்று அறிவித்து இருப்பது சரியல்ல. மாநில அரசின் பொறியியல் வல்லுநர்கள் எந்த அடிப்படையில் இந்தத் தகவலை தந்தார்கள் என்பது புரியவில்லை. கடந்த டிசம்பர் மாதம் பாராளுமன்றத்தில் மத்திய திட்டத்துறை இணை அமைச்சர் ராஜசேகர் எழுத்து பூர்வமாக அளித்துள்ள பதிலில் ஒரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளார். தமிழ் நாட்டில் உள்ள 30 மாவட்டங்களில் 26 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் வேகமாக குறைந்து கொண்டு போவதாக குறிப்பிட்டுள்ளார் ஒரு ஆண்டுக்கு 20 செ.மீ ஆழம் என்ற அளவில் குறைந்து உள்ளது என்ற அபாய அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார் என டாக்டர் ராமதாஸ் மேலும் கூறியுள்ளார்.

# கோவா சட்டசபையில் நம்பிக்கை வாக்கெடுப்பு

# பெரும்பான்மையை நிரூபிப்போமென்கிறது பா.ஜ

(புதுடில்லி)

கோவா சட்டசபையில் நாளை நடைபெறவுள்ள நம்பிக்கை வாக்களிப்பில் பாரதிய ஜனதாக் கட்சியின் கூட்டணி அரசு வெற்றி பெறுமென்று அக்கட்சியின் முன்னாள் தலைவர் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நம்பிக்கை வாக்கெடுப்புக்கு காங்கிரஸ் கட்சியின் அரசியல் விளையாட்டே காரணம் என்றும் நம்பிக்கை வாக்கெடுப்பில் பா.ஜ.கூட்டணி அரசு பெரும்பான்மையை நிரூபிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை சட்டமன்றத் தேர்தல் நடைபெறவுள்ள பீகாரில் வன்முறைகள் நீடிப்பதாகத் தெரிவித்த அவர் தேர்தல் பிரசாரத்திற்கு தான் சென்ற சமயம் உலங்குவானூர்தி மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவித்தார். பீகாரில் தேர்தல் நேர்மையாக நடைபெற மத்திய படையினரை பாதுகாப்பில் ஈடுபடுத்த தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்குமாறு தான் கேட்டுக்கொண்டுள்ளதாகவும் வெங்கையா நாயுடு தெரிவித்துள்ளார்.

# இலங்கையில் இந்.இராணுவத்தின் மீட்புப் பணிக்கு அமெ.படைபாராட்டு

(புதுடில்லி)

இலங்கையில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளுக்கு அமெரிக்கா பாராட்டுத் தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் எம்.விஸ்டில் இது பற்றி மேலும் கூறியதாவது, இலங்கையில் கடற்கோளினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளால் நாங்கள் மகிழ்ச்சியடைந்துள்ளோம். இந்தியாவும் மற்ற தெற்கு ஆசிய நாடுகளும் இலங்கையில் மேற்கொண்ட பணிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்திய வீரர்களுடன் அமெரிக்கப் படையினர் இணைந்து செயற்படவில்லை எனக் கூறப்படுவது தவறு. அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த 1500 வீரர்கள் இங்கு பணியாற்றி வருகின்றனர். அவர்கள் தினமும் இந்திய இலங்கை இராணுவத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டு செயலாற்றுகின்றனர். இதனால் ஒரே பணியைத் திரும்பத் திரும்பச் செய்யும் போக்கு தவிர்க்கப்பட்டுள்ளது. அவர்களுடன் இணைந்து பணியாற்ற எங்களுக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது.

அமெரிக்கா, இலங்கை இடையே நீண்ட காலமாக இராணுவ உறவு இருந்து வருகின்றது. தற்போது இந்த உறவு மேலும் வலுப்பெற்றுள்ளது. இந்த உறவு தொடரவேண்டும் என விரும்புவதாகவும் தெரிவித்தார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**பாய்க்கியநாதர் லூர்த்துநாயகி**

**(கிளி/கட்டைக்காடு)**



அன்னையின் மடியில

**30 - 04-1949**

ஆழிஅலையின் பிடியில்

**03-01-2005**

இளந்தென்றலோடு எமைத் தாலாட்டிய நீலக்கடலே
உன் கோரப் பசியைத் தீர்த்தாயோ எமைத் தாலாட்டிய தெய்வத்தில்
அப்பாவை நாம் இழந்து அல்லல்பட்ட வேளைதனில் எம்மோடு இருந்து
ஆறுதல் கூறிய எம் தாயை ஆழியே நீ பறித்து – எமை
அநாதை ஆக்கினாயே எமைப் படைத்த பரம்பொருளே
ஏற்றருளும் எம் தாயின் ஆன்மாவை சாந்தியில் நிலைத்திட
வேண்டுகின்றோம் அனுதினமும்.

எமது அன்புத் தாயாரின் இறப்புச் செய்தி கேட்டு பல வழிகளிலும் உதவி செய்து துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு இவரின் ஆன்ம சாந்திக்காக 02.02.2005 புதன்கிழமை அன்று காலை 7.00 மணிக்கு கட்டைக்காடு புனித கப்பலேந்திய மாதா ஆலயத்தில் நடைபெறும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொள்வதோடு மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இவரது பிரிவால் துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5625)


இங்கே வெட்டவும்




நெஸ்பிறே பால்மா வாங்குங்கள்!

பால்மா பிரியர்களுக்கு கிளிநொச்சி அம்மன் களஞ்சியம் வழங்கும்

**மாபெரும் பரிசுப்போட்டி**

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்!

நெஸ்பிறே 400கிராம் பைக்கற்றின் மேல்ப்பகுதியை வெட்டிஅதன் பின்புறம் பெயர் விலாசம் ஆகியவற்றை எழுதிதினமும் கீழ்வரும் விலாசத்திற்கு அனுப்புவதன் மூலம் மாதத்தில்ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒரு ஏசியா ஈருருளிக்கு உரிமையாளராகுங்கள். இப்போட்டி பெப்ரவரி மாதம் 1ஆம் திகதிஆரம்பமாகி மறு அறிவித்தல் வரை நடைபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வெற்றியாளரின் பெயர் விபரம் அடுத்து வரும் நாளிதழில் பிரசுரிக்கப்படும்.

வன்னிப்பகுதிக்கான முகவராண்மை பெற்றவர்கள்:

**அம்மன் களஞ்சியம்**

யாழ்சாலை, கிளிநொச்சி. தொ.பே:021-228 5852,5077

அம்மன் களஞ்சிய ஊழியர்கள் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

அனுப்பவேண்டிய முகவரி:
நெஸ்பிறே பரிசுப்போட்டி
ஈழநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி.

கிழமை தோறும் ஒரு ஏசியா ஈருருளி உரிமையாளராகுங்கள்!



இப்போட்டியில் வன்னிப்பகுதியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பங்குபற்ற முடியும்.

(சி-11[illegible])

- வி.பி.முக்கோண கிரிக்கெட் -

# யுஹானா,இன்சமாம் அதிரடித்துடுப்பாட்டம்

# இறுதிப் போட்டி வாய்ப்பை இழந்தது மே.தீவு



அவுஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் வி.பி.கிண்ணத்துக்கான முக்கோண ஒருநாள் போட்டியின் இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலியாவை எதிர்த்து விளையாட பாகிஸ்தான் அணி தகுதி பெற்றுள்ளது.

பேர்த்தில் நேற்று நடைபெற்ற மேற்கிந்தியத்தீவு அணிக்கு எதிரான போட்டியில் அவ் அணியை 30 ஓட்டங்களால் தோற்கடித்த பாகிஸ்தான் இத்தகுதியை பெற்றது.


நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி பாகிஸ்தானை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தது.



முதலில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பாகிஸ்தான் ஒரு கட்டத்தில் 44 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களை இழந்ததுடன் 90 ஓட்டங்களுக்கு மூன்றாவது விக்கெட்டையும் இழந்தது.

இதன் பின்னர் அணித்தலைவர் இன்சமாமும், உப தலைவர் யுஹானாவும் இணைந்து அதிரடியாக ஆடி ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தனர்.

யுஹானா 100 பந்துகளை எதிர்கொண்டு105ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார். இது அவர் பெற்ற 11 ஆவது ஒருநாள் சதமாகும் இன்சமாம் 67 பந்துகளில் 74 ஓட்டங்களை பெற்றார். உதிரிகளாக 27 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவால் விட்டுக கொடுக்கப்பட்டது.



இதன் மூலம் நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் பாகிஸ்தான் 8 விக்கெட்டுக்களை இழந்து 307 ஓட்டங்களைக் குவித்தது.




பந்து வீச்சில் பிரட்ஜோவ் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு எந்தக் கடின இலக்கென்றாலும் வெற்றிபெற வேண்டும் என்ற வேகத்தில் இறங்கிய மேற்கிந்தியத்தீவால் 48.1 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 277 ஓட்டங்களை மாத்திரமே பெறமுடிந்தது.

துடுப்பாட்டத்தில் சர்வான் 87 ஓட்டங்களையும், சந்தர்போல் 58 ஓட்டங்களையும்,பிறவுன் 36 ஓட்டங்களையும், அதிகபட்சமாகப் பெற்றனர். லாறா 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

பந்து வீச்சில் நவீட்-உல்-ஹசன் 4 விக்கெட்டுக்களையும்,கலீல்,அப்ரிடி தலா இரண்டு விக்கெட்டுக்களையும கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக யுஹானா தெரிவானார்.

# சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் மேலும் பத்து வாரங்களுக்கு விளையாடமாட்டார்



சிறிலங்கா கிரிக்கெட் அணியில் நட்சத்திர சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரன் மேலும் பத்து வாரங்களுக்கு கிரிக்கெட்டில் இருந்து விலகியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அவரது தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதை பூரணமாக குணமடையாததால் இந்த நிலை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

கடந்த பல மாதங்களாக மேற்படி உபாதை காரணமாக கிரிக்கெட்டிலிருந்து விலகியிருந்த முரளிதரன் கடந்த மாதம் நடைபெற்ற சுனாமி நல நிதிக் கிரிக்கெட்போட்டியில் உலக11 பேர் அணியில் பங்கு கொண்டு விளையாடினார். இதனால் தோள்பட்டையில் மீண்டும் சிறு வலி ஏற்படவே முரளிதரன் அவுஸ்தீரேலியா பயணமானார்.அங்கு அவரது மருத்துவரைச் சந்தித்தபோது மருத்துவர் முரளிதரனுக்கு மேற்படி அறிவுறுத்தலை விடுத்ததுடன் சத்திரசிகிச்சைக்கும் உள்ளாகியுள்ளார். இதனால் முரளிதரன் மேலும் பல போட்டிகளை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதே வேளை மார்ச் மாதம் முரளிதரன் திருமணபந்தத்தில் இணையவுள்ளார்.



பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டியில் மான்செஸ்டர் யுனைட்டட் அணியின் முன்னணி வீரர் வொயின்றூணியும் அர்சனல் அணியின் சோல்கம்பலும் மோதும் காட்சி

# அவுஸ்திரேலியாவின் சிறந்த கிரிக்கெட் வீரராக கிளார்க்




அவுஸ்திரேலியாவின் சிறந்த கிரிக்கெட் வீரராக இளம்வீரர் மைக்கேல் கிளார்க் தேர்வு செய்யப்பட்டார். இவருக்கு ஜாம்பவான் ஆலன்போர்டர் பதக்கம் வழங்கப்பட்டது. 2005 இல் சிறந்த அவுஸ்திரேலிய வீரரை தேர்வு செய்ய வாக்கெடுப்பு நடந்தது இதற்கு 2004 இல் இருந்து வீரர்களின் செயற்பாடு கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இவ்விருதுக்கு டேமியன் மார்ட்டின்,கிளார்க் கிற்கிடையே கடும் போட்டி காணப்பட்டது. இறுதியில் கிளார்க் 54 வாக்குகளுடன் போர்டர் பதக்கத்தை தட்டிச் சென்றார் மார்ட்டின் (51), ஆடம் கில் கிறிஸ்ட் (41) முறையே இரண்டாம், மூன்றாம், இடங்களைப் பெற்றனர். சிறந்த டெஸ்ட் வீரராக மார்ட்டின் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த ஒருநாள் வீரருக்கான விருதை ஆன்ட்ருசைமண்ட்ஸ் பெற்றார். உள்ளூர் அளவில் சிறந்த வீரராக குயின்ஸ்லாந்துக்காக விளையாடிவரும் ஆண்டிபிக்கல் தேர்வு செய்யப்பட்டார்.

23 வயதான கிளார்க் கடந்த ஆண்டு கலக்கலாக செயற்பட்டார். பெங்களூரில் நடந்த இந்தியாவுக்கு எதிரானதனது அறிமுக டெஸ்ட்




போட்டியிலேயே சதம்(151ஓட்டம் அடித்த) இவர் ஒரு நாள் போட்டிகளில் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கி இரண்டு சதம் கண்டார். இந்த உயரிய விருது பெற்றது குறித்து கிளார்க் கூறுகையில் "கடந்த 12 மாதங்களாக சிறப்பாக செயற்பட்டு வருகிறேன் இவ் விருதுக்கு தேர்வு செய்யப்படுவேன் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை" என்றார்.

# மாட்டினா ஹிங்கிஸ் மீண்டும் களத்தில்

மாட்டினா ஹிங்கிஸ் 2 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் டென்னிசில் களம் இறங்குகிறார்.

சுவிஸ்சர்லாந்தின் மாட்டினா ஹிங்கிஸ் 2 ஆண்டுகளுக்கு முன்பு டென்னிஸ் பிரபலமாக வலம் வந்த பெயர். இவர் கணுக்கால் காயம் காரணமாக சர்வதேச டென்னிஸ் அரங்கில் இருந்து ஓய்வுபெற்றார். தற்போது மீண்டும் களம் இறங்குகிறார். தாய்லாந்திலுள்ள பட்டாய நகரில் 'வால்வோ ஓபன் டென்னிஸ் போட்டிகள் நேற்று முன்தினம் தொடங்கின. இதில் பங்கேற்க முன்னரே விருப்பம் தெரிவித் திருந்தார் ஹிங்கிஸ். நேற்றுமுன்தினம் பட்டாயா நகரில் தீவிர பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஹிங்கிஸ் நிருபர்களிடம் கூறுகையில் "எப்போதுமே எனது எண்ணங்கள் வெற்றியைப் பற்றித்தான் சிந்தித்துக்கொண்டிருக்கும். எனது திறமை மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது. டென்னிசிலிருந்து நான் முழுமையாக விலகிவிடவில்லை. வர்ணணை,பயிற்சி எனத் தொடர்ந்து டென்னிசில் எனது பங்கை செலவிட்டுத்தான் வருகிறேன். இப்போது கூட மனநலம் மற்றும் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்காக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் 'வால்வோ



டென்னிஸ் தொடரில்' களமிறங்கியுள்ளேன். என்றார். இந்தத் தொடருக்குப் பிறகு வேறு போட்டிகளில் பங்கேற்பாரா என்பது பற்றி அவர் தெளிவாகக் குறிப்பிடவில்லை







சிம்பாப்வேவுக்கு எதிரான ஒரு நாள் கிரிக்கெட் தொடரை வங்கதேசம் 3-2 என்ற கணக்கில் கைப்பற்றிய. மகிழ்ச்சியில் வெற்றிக்கிண்ணத்தை முத்தமிடும் அணித்தலைவரையும். மகிழ்ச்சியில் துள்ளும் அப்தாபை ஆச்சிரியத்துடன் பார்க்கும் ஹபிபுல் பஷாரையும் இந்த அரிய வெற்றியை ரசிகர்களுடன் பகிர்ந்து கொள்ள தங்களது தேசியக் கொடியுடன் மைதானத்தை வலம் வரும் வங்கதேச வீரர்களையும் படத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலிய டென்னிஸ் வீரர் லெயிட்டன் ஹெவிட் கரம்பிடிக்கிறார்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் கிண்ணத்தை இழந்த அவுஸ்திரேலிய வீரர் லெயிட்டன் ஹெவிட் அந்நாட்டின் தொலைக்காட்சி விளம்பர அழகியான பிக்கார்ரைட்டை கரம்பிடிக்கவுள்ளார்.

இவர்கள் இருவருக்குமிடையிலான முதல் சந்திப்பு 5 வருடங்களுக்கு முன்பு நிகழ்ந்ததாகவும், அது கடந்த ஆண்டு நடைபெற்ற சந்திப்பின்போது திருமணம்வரை வந்திருப்பதாகவும் கூறப்படுகிறது. இதேவேளை கடந்த வருடம் பெல்ஜியம் நாட்டின் டென்னிஸ் வீராங்கனை கிம்கிளிஸ்டர்ஸ் ஹெவிட்டு கிடையிலான உறவு முறிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## சிந்தனைக்கு



எமது சுதந்திரத்தை நாமே போராடி வென்றெடுக்கும் மனோதிடமும், நம்பிக்கையும்,உறுதிப்பாடும் எங்களிடம் உண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 02-02-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## அனர்த்தத்தின் பின்பும்!

வலி–வடக்கிலுள்ள உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்படும் விவசாய நிலங்களுக்குப் பதில் வேறு இடத்தில் காணிகளை வழங்குவது தொடர்பாக ஆலோசனை ஒன்றை சிறிலங்கா அரசு முன்வைத்துள்ளது. உயர் நீதிமன்றத்தில் வலி–வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள விவசாயக் காணிகளில் பயிர்செய்ய அனுமதிக்க வேண்டும் எனக்கோரி தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போதே அரசாங்கத் தரப்பால் இத்தகைய யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் இவ்யோசனையானது உயர் பாதுகாப்பு வலயத்தில் அரசாங்கம் எதுவித மாற்றத்தையும் செய்வதற்குத் தயாராக இல்லை என்பதன் வெளிப்பாடே ஆகும். அதாவது, பெரும் இயற்கை அனர்த்தத்தினால் நாடே அழிந்தாலும், சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமது ஆக்கிரமிப்புச் சிந்தனையில் இருந்து விடுபடப்போவதில்லை என்பதையே இது காட்டி நிற்கின்றது.

அதாவது, தமது சொந்த நிலத்தைத் தாருங்கள் எனக் கோருபவர்களுக்கு வேறொரு இடத்தில் காணிகள் தருகிறோம் என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதொரு நியாயப்பாடு அல்ல. அதுவும், ஆக்கிரமிப்புச் சிந்தனையுடன் சிங்கள இராணுவம் நிலைகொள்வதற்கு தமது விளைநிலங்களை தமிழ் மக்கள் தாரை வார்த்துக் கொடுத்துவிட முடியாது.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்கள் இவ்வாறு நடந்து கொள்வது ஒன்றும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதற்கு சுனாமிப் பேரலைகளின் தாக்கத்தினால் ஏற்பட்ட அழிவின் பின்னரும் சிறிலங்கா அரசாங்கம், ஆயுதப் படைகளின்செயற்பாடுகளில் இருந்தே இதனால் புரிந்துகொள்ள முடியும்.

சுனாமிப் பேரலைகள் தமிழர் தாயகத்தின் கிழக்குக் கரையோரத்தில் பெரும் அனர்த்தத்தை விளைவித்ததென்பது உலகம் ஏற்கனவே அறிந்ததொன்று. இவ் அனர்த்தத்தைத் தொடர்ந்து மக்கள் பாதுகாப்புத் தேடிக் கரையோரத்தில் இருந்து உள்நோக்கி நகர்ந்துள்ளனர். மக்களுக்கு இதனைத் தவிர வேறு வழியும் இல்லை.

இதேவேளை, பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் – குறிப்பாக, கரையோரங்களுக்கு மிக அண்மித்த பகுதிகளில் மக்களை மீளக் குடியேற்றுவது தொடர்பாகத் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டதோடு, கரையோரத்தில் இருந்து ஓரிரு நூறு மீற்றர்கள் தொலைவில் மக்களைக் குடியமர்த்துவது எனவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால், இத்தகைய தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டாலும் தமிழர் தாயகப் பகுதியின் கரையோரங்களில் உள்ள சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்பினர் சுனாமி அனர்த்தத்தின் பின்னரும் தமது செயற்பாடுகளை நிறுத்தி வைக்கவில்லை. தொடர்ச்சியாகத் தமது பணிகளை மேற்கொள்வதிலேயே அக்கறை கொண்டுள்ளனர்.

குறிப்பாக, கிழக்குக் கரையோரங்களில் இருந்து பெரும் பாதிப்பைச் சந்தித்த சிறிலங்கா இராணுவம் மற்றும் கடற்படை முகாம்கள் யாவும் அதே இடங்களில் மீளவும் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில், யுத்த காலத்தில் முகாம்களை நிறுவவும், புனரமைப்புக்களைமேற்கொள்ளவும், குண்டு வீச்சு, செல் வீச்சு போன்றவற்றால் அழிந்து போனதமிழர் உடமைகள் அன்றி ஆயுதப்படையினரால் உடைக்கப்பட்ட தமிழர் உடமைகளில் இருந்துமே முகாம்களும்,சோதனைச் சாவடிகளும் அமைக்கப்பட்டன.

ஆனால், சுனாமியின் பின்னரான வேறுபாடு என்னவெனில், முன்னர் யுத்தத்தினால் அழிந்தவை, மக்கள் விரட்டப்பட்ட பகுதிகளில் இருந்த அவர்களின் உடமைகள் சிறிலங்கா இராணுவத்தினரதும், கடற்படையினரதும் சூறையாடப்பட்டன. எனின் தற்பொழுது சுனாமியால் அழிக்கப்பட்டவையும் பயன்படுத்தப்படுகின்றன.

இதில் உள்ள முரண்பாடு என்னவெனில், மக்களை சொந்த இடங்களில் குடியேறவிடாது தடுக்கும் அரசாங்கம், அப்பகுதிகளில் இராணுவக் காவலரண்களையும், பாதுகாப்பு வேலிகளையும், முகாம்களையும் அமைத்து வருவதுதான். இதேவேளை, இப்பகுதிச் சொந்தக்காரர்களை அப்பகுதிக்கும் செல்லவிடாது தடுத்தும் வருகின்றது. அத்தோடு கடலுக்குள் தொழிலாளர் சென்றுவர அடையாள அட்டைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என இராணுவம் வற்புறுத்தி வருகின்றது.

அதாவது,சுனாமி வந்தால் என்ன அதனைவிடமோச மானதொரு பாதிப்பு ஏற்பட்டாலும்கூட சிறிலங்கா அரசாங்கமோ தமது ஆக்கிரமிப்புச் சிந்தனையை மாற்றிக் கொள்ளவில்லை என்ப தன் வெளிப்பாடே கரையோரங்களில் முட்கம்பி வேலிகளை அமைப் பதும், காவலரண்களைப் புதிப்பிப்பதும் ஆகும்.

இத்தகையதொரு நிலையில், உயர்பாதுகாப்பு வலயம் எனக் கூறி ஆக்கிரமித்துள்ள பிரதேசங்களை சிறிலங்கா இராணுவம் அரசாங்கம் விட்டுக்கொடுப்புச் செய்யும் என எவ்வாறு எதிர்பார்க்க முடியும். ஆனால் இராணுவம் விட்டுக் கொடுப்புச் செய்ய விரும்பவில்லை எனக் கூறி பிரச்சினையை அரசாங்கம் தட்டிக்கழிக்க முற்படுவது ஏமாற்றுவேலையாகும்.

# கரையோரத்திலிருந்து 100 மீற்றருக்கு அப்பாலேயே கட்டடங்கள் நிர்மாணம்

### -முடிவில் மாற்றமில்லை என சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

கடற்கரையின் கரையோர எல்லையில் இருந்து நூறுமீற்றர் பகுதிக்குள் எந்தவித கட்டட நிர்மாணப் பணிகளையும் செய்ய முடியாதென அரசு எடுத்த முடிவில் எந்தவித மாற்றமும் கிடையாதென சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

சனாதிபதி செயலகத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றின் போதே சனாதிபதி இவ்வாறு கூறினார்.

அரசியல் நோக்கங்களுக்காக சிலர் அரசின் தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளபோதிலும் இயற்கை அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பது அரசின் கடமை என்றும் சனாதிபதி மேலும் தெரிவித்தார்.

சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் பின்னான புதிய கட்டட அமைப்புக் குறித்து பல்வேறு கருத்துக்கள் வெளியாகிவரும் நிலையில் கரையோரத்தில் இருந்து அமைக்கப்பட வேண்டிய தூரத்தை அல்ல உயரத்தையே கருத்தில் எடுக்க வேண்டும் எனப் பொறியியலா ளர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இது குறித்து நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன கருத்துக் கூறுகையில் நாம் இந்த 100 மீற்றர் முடிவை எடுக்கும்போது உயரத்தையும் கவனத்தில் கொண்டோம். சில இடங்களில் கடலை விட உயரமான இடங்கள் காணப்படும் பிரதேசங்களில் இந்தச் சட்டம் மாறும். அதேபோல் இந்தச் சட்டம் சர்வதேச சட்டங்களுக்கும். விதிமுறைகளுக்கும் அமைவாகவே உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப்பிரச்சினையில் நாட்டு மக்களின் பிரச்சினையையே முக்கிய கவனத்தில் கொண்டுள்ளோம் எனத் தெரிவித்தார். (32)

# மட்டக்களப்பில் உயிரிழப்பு வீதம் பறங்கியர் இனத்துக்கே அதிகம்

### - பறங்கியர் சமூகத்தின் அறிக்கையில் தெரிவிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுனாமியினால் அண்மையில் ஏற்பட்ட உயிரிழப்புகளை மாவட்ட இன விகிதாசார ரீதியாக நோக்கும் போது பறங்கியர் இனம் கூடுதலாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த சமூகம் கூறியுள்ளது.

இம் மாவட்டத்தில் உயிரிழந்துள்ளோரின் எண்ணிக்கை 3432 ஆகும். அதாவது தமிழர்கள் 3162, முஸ்லிம்கள் 118, பறங்கியர் 156. இத்தொகை முறையே அந்த இனங்களில் 0.79 வீதம்,0.08 வீதம், மற்றும் 5.57 வீதம் என இந்தத் தொகை அமைகின்றது. மட்டக்களப்பு மாவட்ட இன விகிதாசாரத்தில் 0.48 வீதத்தைப் பறங்கியர் கொண்டிருப்பதால் தான் உயிரிழப்பு வீதம் அந்த இனத்திற்குக் கூடுதலாக ஏற்பட்டுள்ளது. இவர்கள் மிகச் சிறிய தொகையினராக இருந்தாலும் இந்த உயிரிழப்பு விகிதத்தைப் பொறுத்தவரை அந்த இனத்திற்குப் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு பறங்கியர் சமூகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாவட்டத்தில் தமது இனத்தைச் சேர்ந்த 500 குடும்பங்களில் 3000 பேர் வரை இருக்கின்றார்கள். சுனாமியினால் 155 பேர் வரை உயிரிழந்துள்ளார்கள். 290 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. 220 குடும்பங்கள் இருப்பிடங்களை இழந்துள்ளன. 90 சதவீதமானோர் தொழில் உபகரணங்களை இழந்துள்ளார்கள். இதன்படி 58 சதவீதமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டுள்ளது. நத்தார் பண்டிகையை இம்முறை வெகு விமரிசையாக கொண்டாடிய மறு நாள் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. இவர்களின் பிரதான குடியிருப்புத் தளமான டச்பார் கிராமம் தரை மட்டமாகியது. இதன் காரணமாகவே இந்த இனத்திற்குக் கூடுதலான இழப்புகள் ஏற்பட்டுள்ளது. இந்தக் குடும்பங்கள் அனைத்தும் தற்போது புனித சிசிலியா மகளிர் பாடசாலையில் அகதிகளாக வசிக்கின்றார்கள்.

மட்டக்களப்பு பறங்கியர் சமூகத்தின் தலைவர் சனி ஒக்கர்ஸ் இது தொடர்பாக ஊடகங்களுக்குத் கருத்துத் தெரிவிக்கையில், தமது சமூகத்திற்கு ஒரே தடவையில் ஏற்பட்ட இந்த உயிரிழப்புகள் மாவட்ட இன விகிதாசாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார். தச்சு, ஓடத்துறை இயந்திரங்கள் திருத்தல் போன்ற துறைகளில் சுயதொழில்களில் திறமைமிக்கவர்களான எமது சமூகத்தவர்கள் கல்வியிலும் முன்னேற்றமடைந்து பல்கலைக் கழகம் சென்று உயர் கல்வி கற்று வருகின்றார்கள். எதிர்பாராத வகை யில் எமது சமூகத்திற்கு ஏற்பட்ட, இந்தத் தாக்கத்திலிருந்து வழமை நிலைக்கு திரும்ப குறைந்தது 10 வருடங்களாவது எடுக்கும் என்றார்.

# ஆளும் கட்சி பா.உ களுக்கான விசேட கூட்டத்திற்கு ஏற்பாடு

### -உள்ளக முரண்பாடுகள் குறித்தும் ஆராய்வு

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விசேட கூட்டம் ஒன்று இடம் பெறவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. நாளை சனாதிபதி செயலகத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம் பெறவுள்ள இந்தக் கூட்டத்தில் சுனாமிக்குப் பின்னான தேசிய முகாமைத்துவ நடவடிக்கைகள் வரவு செலவுத் திட்டத்தின் ஊடான நிதி ஒதுக்கீடுகள சரியான முறையில் பயன்படுத்தப்படுகிறதா போன்ற விடயங்களுடன் உள்ளக முரண்பாடுகள் குறித்தும் பேசப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# 2004 இல் எதிர்பார்த்த மொத்த உள்நாட்டு வரி வருமானம் கிடைத்துள்ளது

### —சிறில.நிதியமைச்சு தெரிவிப்பு

சிறிலங்கா அரசாங்கம் 2004 ஆம் ஆண்டு எதிர்பார்த்த உள்நாட்டு மொத்த உற்பத்தி வரி வருமானத்தைப் பெற்றுள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது. நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டிலேயே இந்தத் தகவல் வெளியிடப்பட்டது. 2003 ஆம் ஆண்டு மொத்த உற்பத்தி வருமானத்தில் 13 வீதமாக காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டில், அதனை 14.2 வீதமாக உயர்த்திக் கொள்ள முடிந்தாக இன்றைய மாநாட்டில் விளக்கமளித்த நிதியமைச்சின் செயலர் பி. பி. ஜயசுந்தர தெரிவித்தார். இதன் அதிகரிப்பின் அடிப்படையில் அரசாங்கத்துக்கு 280.3 பில்லியன் ரூபா வருமானமாகக் கிடைத்தது என அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் 2005 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வருமானத்தை 15.2 என்ற வீதத்திற்கு உயர்த்துவதன் மூலம் 351 பில்லியன் ரூபாவை வருமானமாகப் பெற்றுக்கொள்ள முடியும என பி.பி.ஜெயசுந்தர நம்பிக்கை வெளியிட்டார். 2003 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வரி வருமானத்தில் குறைவு காணப்பட்டமைக்கு முன்னைய அரசாங்கத்தின் வரி மன்னிப்புப் கொள்கையும் காரணம் எனத் தெரிவித்த அவர் அந்தக் காலத்தில் நடைமுறையில் இருந்து வரி அறவீட்டு முறையிலான குறைகளும் வரி வருமானக் குறைவுக்குக் காரணமாக அமைந்ததாகக் குறிப்பி ட்டார். அத்துடன் அரசாங்கத் துக்குப் புதிய வரிகளை மக்கள் மீது சுமத்தும் திட்டம் எதுவும் இல்லை எனக்கூறிய அவர் முதலீடுகள் மூலமே வரி வருமானத்தைப் பெருப்பிக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இதேவேளை நிகழ்வில் பங்கேற்ற நிதியமைச்சர், சரத்அமுனுகம கருத்துரைக்கையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இலங்கையைக் கட்டியெழுப்பும் முகமாக நாட்டுக்கு வழங்கப்படும் நிதியானது முழுமையாகக் கணக்காய்வுக்கு உட்படுத்தப் படவுள்ளதாகத் தெரிவித்தார். அதனை அரசாங்கம் முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். சர்வதேச ரீதியாக பிரசித்தம் பெற்ற கணக்காய்வு நிறுவனமான மெக்கென்சி இந்த நிதிகள் யாவற்றையும் கணக்காய்வு செய்யவுள்ளது.

எனவே இதில் பக்கச் சார்பான விடயங்கள் இடம்பெறுமென எதிர்பார்க்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையின் கொபி அனானும் இந்தக் கணக்காய்வு விடயத்தை வலியுறுத்தியிருந்தமையையும் அவர்நினைவு படுத்தினார். (32)

# மீட்புப்பணிக்கு இலங்கைக்கு வருகைதந்த வெளிநாட்டுத் துருப்புகள் வெளியேறுகின்றன

### - சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவிப்பு

இலங்கையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டதைத் தொடாந்து மீட்பு நடவடிக்கைகளுக்காக வருகை தந்த வெளிநாட்டுத் துருப்புகள் இலங்கையிலிருந்து வெளியேறி வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தியா, திருகோணமலையில் தரித்திருந்த தனது கப்பலை நேற்று முன்தினம் அங்கிருந்து விலக்கிக் கொண்டுள்ளதாகவும், இதுவே இலங்கையில் இறுதியாக தரித்திருந்த இந்தியக் கப்பல் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தற்போது 80 இந்தியப் படையினர் மட்டுமே இலங்கையில் நிலைகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கத் துருப்பினர் சுமார் 600 பேர்வரை இலங்கையில் நிலைகொண்டுள்ளதாகவும், இவர்கள் அனைவரும் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கையிலிருந்து வெளியேறி விடுவார் கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதேவேளை தற்போது 80 அவுஸ்திரேலியத்துருப்பினரும், 200 கனேடியத்துருப்பினரும், பாகிஸ்தானியப்படையினர் 170 பேரும், பெல்ஜிய வீரர்கள் 69 பேரும், தங்கியுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது. (32)

# தமிழீழ நிர்வாகசேவையினரால் பணிநிலைகளுக்கான வேண்டுகை

பல்வேறு பணிநிலைகளுக்கான வேண்டுகைகள் தமிழீழ நிர்வாக சேவையினரால் கோரப்பட்டுள்ளன. இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைக்குட்பட்ட ஆண்/பெண் இருபாலரது விண்ணப்பம் கோரப்படுகின்றது. உரியவர்கள் அலுவலக நாட்களில் தமிழீழ நிர்வாக சேவை,கிளிநொச்சி மாவட்டத்துடன் தொடர்புகொண்டு தங்கள் தகைமைகளுக்கேற்ப விபரங்களைப் பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

### - சுனாமியால் பாதிக்கப்பட்டோரில் -

# மாதாந்த ஊதியம் பெறுவோருக்கும் மாதாந்தம் ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு

(கொழும்பு)

சுனாமி கடற்பேரலை அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கு வழங்கப்படும் ஐயாயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு அரச ஊழியர்களுக்கும் வழங்கப்படுமென அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் திலக்ரண விராஜா தெரிவித்துள்ளார்.

மாதாந்தக் கொடுப்பனவான இந்த ஐயாயிரம் ரூபாவை முதலில் நிரந்தர சம்பளம் பெறுவோரின் குடும்பங்களிற்கு வழங்குவதில்லையென திறைசேரி ஏற்கனவே தீர்மானித்திருந்ததாகவும்,

இது தொடர்பாக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை ஆராய்ந்து பார்த்து சகல குடும்பங்களுக்கும் ஐயாயிரம் ரூபாவை மாதாந்தக்கொடுப்பனவாக வழங்குவதற்கு சனாதிபதி தீர் மானித்துள்ளதாக திலக்ரண விராஜா மேலும் கூறியுள்ளார்.

# குற்றச் செயல்களை ஒழிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

### - சிறீல. பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

நாட்டில் குற்றச் செயல்களை ஒழிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

அரசாங்க ஊழியர் சேமலாபநிதியில் ஊர்காவல் படையினரையும் இணைத்துக் கொள்வது தொடர்பாக நேற்றுக் கொழும்பில் இடம்பெற்ற வைபவத்திலேயே அவர் இவ்வாறு கூறினார்.

சட்டத்தைப் பாதுகாப்பதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள செயற்றிட்டம் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லப்படுவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# திருக்கோவில் நலன்புரி நிலையத்தில் ஆபாசப்படம் ஒளிபரப்பும் படையினர்

திருக்கோவில் மண்டான் அகதிகள் நலன்புரி நிலையத்தில் சிறிலங்கா அதிரடிப்படையினர் ஆங்கில ஆபாசப் படங்களை ஒளிபரப்பு செய்வதாக பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

உயிர் உடமைகளை இழந்து வேதனையில் நொந்து கொண்டிருக்கும் மக்களுக்கு களிப்பூட்டல் என்ற போர்வையில் கலாசார சீர்கேடான முறையில் ஆபாசத் திரைப்படங்களை ஒளிபரப்புச் செய்வதால் சமூகம் பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக விநாயகபுரம் பொதுநல அமைப்பால் உடும்பன்குள அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலாகரனிடம் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை நலன்புரி நிலையங்களில் ஈ.பி.டிபியினர் “இதய வீணை” ஒலி பரப்புச் செய்யப்படுவதாகவும் மக்கள் முறையிட்டுள்ளனர்.

தேசவிரோத சக்திகளான ஈ.பி.டி.பி. கும்பலினால் தென்றல் ஒலிபரப்பு சேவையில் தமிழினத்திற்கும். விடுதலைப் போருக்கும் எதி ரான இந்த ஒலிபரப்பு குறித்து ஏற்கனவே மக்கள் வெறுப்பு தெரிவித்து ஒதுக்கியிருந்த நிலையில் படையினர் ஒலிபரப்பை பதிவு செய்து ஒலி பரப்பி வருவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

# பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்கள் இல.பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன

### ஜே.வி..பி பாராளுமன்ற உறுப்பினர் சந்திசேகரன்

(கொழும்பு)

சுனாமி நிவாரணப் பணிகளில் ஈடுபடும் ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களைத் தவிரப் பெரும்பாலான அரசசார்பற்ற நிறுவனங்கள் இலங்கையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளையே முன்னெடுப்பதாக மக்கள் விடுதலை முன்னணி ( (ஜே.வி.பி) பாராளுமன்ற உறுப்பினர் சந்திரசேகரன் கூறியுள்ளார்.

இவர் நேற்றைய தினம் லண்டன் பி.பி.ஸியின் தமிழஓசைக்கு வழங்கிய செவ்வியின் போது பி.பி.ஸி செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றிற்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் சுனாமி என்ற போர்வையில் வெளிநாடுகளில் இருக்கின்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் அனுப்புகின்ற பொருட்கள் இலங்கைக்குப் பாதகமான நிலைமைகளை முன்னெடுப்பதாகவே உள்ளதெனக் கூறினார்.

அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களும் அரசிற்கு பாதகமான செயல்களில் ஈடுபட்டுவருவதாகப் போரைத் தூண்டிவிடக்கூடிய செயலில் ஈடுபட்டு வருவதாகக் கூறுகிறீர்களா எனக் கேட்ட போதே ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திர சேகரன் மேற்கண்டவாறு கூறினார்

## நோர்வேயில்...

நோர்வே பிரதிநிதிகள் எதிர்க்கட்சித்தலைவருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் திட்டத்தைத் தயாரிக்கும்போது முஸ்லிம் பிரதிநிதிகளையும் உள்ளடக்குவது வினைத்திறன் மிக்கதாக அமையும் எனக் கூறிய ரணில் விக்கிரமசிங்க வடக்குக்கிழக்கிலுள்ள சிங்கள மக்களின் பிரதிநிதிகளையும் உள்வாங்குவதன் மூலம் இத்திட்டத்தை இலகுபடுத்த முடியும் எனக் கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மிலிந்தமொறகொடவும் உடன் சென்றார்.

## சுனாமியால்....

ஆற்றுபவர்கள், மக்களோடு உதவிபுரிகின்ற அரசங்க அதிகாரிகளுக்கான ஒரு பயிற்சியும், மருத்துவ தொண்டுகள் செய்பவர்களுக்கான ஒரு பயிற்சியும், அதேபோல் உளவளத்துணையாளர்களுக்கு உதவி புரிகின்றவர்களுக்கு ஒரு பயிற்சியும் மருதங்கேணியிலும். திருகோணமலையிலும் வைப்பதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டது.

உளவளத்துறையின் அடுத்த திட்டமாக மக்களுக்கு அடிப்படையாக உளவளத்தைப் பாதிக்கக் கூடிய ஒவ்வொரு சமூகக் காரணிகளையும் கண்டுபிடித்து அந்த சமூக காரணிகளின் குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்காக உள்வளப் பணி செய்பவர்கள் மட்டுமன்றி. சமூகப் பணி, நிவாரணப் பணிகளை மேற்கொள்பவர்களுக்கு நாங்கள் ஒரு தெளிவான நிலைப்பாட்டை ஏற்படுத்த வேண்டும் என்ற இணக்கப்பாட்டையும் ஏற் படுத்தியுள்ளோம்.

இதற்கு யுனிசெப் நிறுவனமும் முழு ஆதரவையும் வழங்கி வருகின்றது. அதுபோல் தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் தங்களாலான முழுப்பங்களிப்பையும் செய்து கொண்டிருக்கின்றது. எனத் தலைவர் தெரிவித்தார்.மேற்படி ஒன்றுகூடல் நிகழ்வில் உளவளத்துணை ஒருங்கிணைப்புக் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர். (கு,ச)

## அனர்த்த....

வட்டாரங்களில் பல்வேறு ஊகங்கள் எழுப்பப்படுகின்றன. நிவாரண உதவிகள் என்ற பெயரில் விடுதலைப்புலிகள் தமது இராணுவப் பலத்தை சேகரிப்பதற்குப் பல ஆயுத தளபாடங்களைக் கொள்முதல் செய்கின்றனர். விடுதலைப்புலிகள் நவீன ரக உபகரணங்கள் பலவற்றை இதன்மூலம் பெற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே நிவாரணப்பணி என்ற பெயரில் சிறிலங்காவில் நிலைகொண்டிருக்கும் அனைத்து வெளிநாட்டுத் தரப்புக்களிடமும் இது குறித்து உடன் விசாரணை நடத்தவேண்டும். இங்கு மேற்கொள்ளப்படும் மனிதாபிமான உதவிகள் எவை? மேற்கொள்ளப்படும் ஏனைய வேலைகள் எவை? என்பவற்றைப் பட்டியற்படுத்தி அரசு அறிவிக்க வேண்டும். தேசியப் பாதுகாப்புக்குப் பொறுப்பான ஏக தலைவர் என்ற அடிப்படையில் நீங்கள் இந்த வேண்டுகோளை ஏற்று உடனடி விசாரணைக்கு உத்தரவிட வேண்டும்.என்று ஜே.வி.பி. அந்தக் கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதேவேளை சுனாமி பேரலை அனர்த்தத்தின் பின்னர் இலங்கைக்கு வரும் நிவாரணப் பொருட்களுள் மனிதாபிமான உதவிகளாகக் கருதக் கூடிய பொருட்களுக்கான பட்டியலை உடனடியாக வெளியிடுமாறு ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் குழுத் தலைவர் விமல்வீரவன்ச சனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெளியிடப்படும் இந்தப் பட்டியலுக்குப் புறம்பாக இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களையும் இலங்கையின் பொதுச் சட்டத்திற்கு உட்படுத்துமாறும் சனாதிபதியிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ஜே.வி.பி இவ்விடயம் தொடர்பான அறிக்கையில், தற்போது அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டுள்ள சட்ட விரோதமாக இறக்குமதி செய்யப் பட்டுள்ள இரண்டு உலங்கு வானூர்திகளையும், தொடர் புசாதன உபகரணங்களையும் அரச உடமையாக்கும்படியும், இதே போன்று இலங்கைக்கு வந்துள்ள அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் குழுக்கள் தொடர்பாக பூரண விசாரணைகளை நடத்து மாறும் அது சனாதிபதியிடம் அவர் மேலும் கேட்டுள்ளது. (32)

## சமாதான....

சனாதிபதியையும் சந்தித்துக் கலந்துரையாடினார். ஜப்பானிய அரசாங்கம் சுனாமி எச்சரிக்கை மையத்தை இலங்கையில் அமைப்பது தொடர்பில் தொழில்நுட்ப உதவிகளையும், பயிற்சிகளையும் வழங்குவதற்குத் [illegible] பாராக உள்ளது.

எனினும் இலங்கை அரசாங்கம் அதற்கான கட்டடம் உட்பட்ட வசதிகளைச் செய்து முடிப்பதற்கும் உரிய அதிகாரிகளைத் தெரிவு செய்வதற்குமே காலம் தேவைப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான உறவில் முன்னேற்றம் ஏற்பட்டு அதன் மூலம் சமாதானத்தில் திருப்பம் ஏற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.சுனாமி தொடர்பாக ஜப்பான் அதிக அனுபவத்தைக் கொண்ட நாடு எனவும் ஜப்பானியத் துணை அமைச்சர் தனிகாவா குறிப்பிட்டார்.

சூசென் தானிகாவா நேற்று முற்பகல் சனாதிபதி மாளிகையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்துள்ளார்.

இதன்போது இலங்கையைக் கட்டி எழும்பும் பணிக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் சனாதிபதியிடம் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அக்கியோசூடா, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் யுக்காக்கா ஹிந்துனா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

## பிரிட்டிஸ்...

நேரில் பார்வையிட தமிழீழம் வருகை தரவுள்ளார்.

லண்டனில் உள்ள ஈழத் தமிழர்களின் விசேட வேண்டுகோளை அடுத்து எதிர்வரும் 5ஆம் திகதி இலங்கை வருகை தர உள்ள றொபேட் ஈவன்ஸ், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு, அம்பாறை, காலி ஆகிய பகுதிகளைப் பார்வையிட உள்ளார். தமிழ் தகவல் தொழில்நுட்ப ஒருங்கமைப்பினரால் (TITA) லண்டன் சிறி கனக துர்க்கை அம்மன் ஆலய நிதி உதவியுடன் நடைபெறும் TITA/SKTATT யாழ் இலவச கணினி பயிற்சி நிலையத்தில் பயின்று வெளியேறும் மாணவர்களுக்குரிய சான்றிதழ வழங்கும் வைபவம் மற்றும் TITA/SKTATT இலவச ஆங்கில பயிற்சி நிலையத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் யாழில் 6ஆம் திகதி றொபேட் ஈவன்ஸ் பங்கு பற்றவுள்ளார். தொழிற்கட்சி உறுப்பினரான றொபேட் ஈவன்சுடன் இலங்கையரான ஹரோ கவுன்சிலர் தயாவும் உடன் வருகை தருகிறார். றொபேட் ஈவன்ஸ் தமிழீழத்திலே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அனைத்து மாவட்டங்களிலும் முன்னெடுத்து வரும் நிவாரணப் பணிகளை நேரில் பார்வையிடவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசியல்...

அமைந்துள்ள சிறப்பு அதிரடிப்படையினரின் காவல் நிலையப் பகுதியைக் கடந்து செல்லும்போது அங்கு நின்ற அதிரடிப்படையினர் இவரை வழி மறித்துள்ளனர். இவர்தான் போராளி என உறுதிப்படுத்தியபோதும் அதனைப் பொருட்படுத்தாத இவரை மிக மோசமாகத தாக்கியுள்ளனர். இது குறித்து உடனடியாக மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவில் உடும்பன்குளப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் நிலாகரனால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (32)

## கொழும்பின்...

என்பனவற்றைச் சோதனையிட்டனர். அத்துடன் நேற்று முன் தினமும், நேற்றும் காலி வீதியில் 6இற்கும் மேற்பட்ட தற்காலிகக் காவலரண்களை அமைத்து சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தற்பொழுது நடைமுறையிலுள்ள அவசர காலச்சட்டத்தின் கீழ் இப்பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதாக படைத்தரப்பு தகவல்கள் கூறின. (32)

## தொண்டமனாறில்...

இதேவேளை காயமடைந்த இருவரான ம. ஜெயக்குமாரி (வயது 37), அவரது மகனான எம். ஜெயரூபன் (வயது-18) ஆகிய இருவரும் யாழ். போதனா வைத்தியசலையினில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அதேபோன்று உயிரிழந்த பாடசாலை மாணவனான இ.தனுஷியனின் சடலம் வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறைப் பொலிசார் விபத்துத் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (27,33,45)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது